# ஆதாரம்



சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு இதழ்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

பங்குனி - சித்திரை 1994
இதழ்-12 விலை: 15/-

ஆதாரம்

# வலிகிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி

எமது ப. நோ. கூ. சங்கம் மக்களுக்கு
ஆற்றி வருகின்ற சேவைகள்

- நுகர்ச்சிப் பொருள் கொள்வனவு
- நுகர்ச்சிப் பொருள் விற்பனவு
- இரும்புப் பொருள் கொள்வனவு
- இரும்புப் பொருள் விற்பனவு
- பாடசாலை உபகரணப் பொருள் கொள்வனவு
- பாடசாலை உபகரணப் பொருள் விற்பனவு
- விவசாயப் பொருள் கொள்வனவு
- விவசாயப் பொருள் விற்பனவு
- கிருமி நாசினி வகை கொள்வனவு
- கிருமி நாசினிவகை விற்பனவு
- உரப்பசளை கொள்வனவு
- உரப்பசளை விற்பனவு

- வாடகை கதிரை சேவை
- கிராமிய வங்கிச் சேவை
- கட்டட ஒப்பந்த சேவை
- பாண் உற்பத்தி விற்பனவு சேவை
- வாகன சேவை

ப. நோ. கூ. சங்கம்
அச்சுவேலி.

---

## மக்கள் சேவையில்
## தாயகம் நியாய விலைக்கடைகள்

உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும்
உங்களுக்குத் தேவையான ஏனைய
பொருட்களையும்
உங்களுக்கு அருகாமையில்
உள்ள
''தாயகம்'' கடைகளில் பெற்றுக்
கொள்ளலாம்.

**O தாயகம் 11**
நல்லூர் பிரதேசசபை முன்பாக
கொக்குவில்.

**O தாயகம் 12**
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

பொது சன நூலகம்
17-5-1994
யாழ்ப்பாணம்

# ஆதாரம்



''சுயநிறைவான, தன்னில்தானே தங்கி நிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமுகமாக எமது தேசம் உருவாகவேண்டும் என்பதே எனது விருப்பம். மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரிமையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகிறேன். இந்தப் புதிய சமுகத்தில் உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவவேண்டும்.''

தமிழீழத் தேசியத் தலைவர்

**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

ஆதாரம்





# சொந்தமண்

□□ நாக. பத்மநாதன் □□

காற்று பெரும் கோபத்தோடு - கறுவிக்கொண்டு வந்தது!

ஆனால் இங்கு வந்த பின் - இவர்களைப் பார்த்த பின் - அதன் வேதனை தணிந்தது!

''பாவம் அந்த மனிதர்! அவரின் பேச்சைக்கேட்டு நான்தான் பதகளித்து விட்டேன்!'' என அது தன்னையே ஏசிக்கொண்டது.

''மிலேச்சரின் பேச்சை நாம் பெரிதாகக் கொள்ள வேண்டியதில்லை'' என அதன் குரல் மெல்லென ஒலித்தது.

இங்கு -

காலைச் சூரியனின் ஒளிபட்டு கிணற்று

வாய்க்கால்நீர் பளிச்சிட்டு ஓடியது.

மரவள்ளி குருத்திட்டு கெம்பி நின்றது!

ஓரத்தே பூசினி, பயற்றைக் கொடிகள்;

நீரிலே நிறைந்து வளரும் மிளகாய்ச் செடிகள்; கத்தரி வெண்டிச் செடிகள்.

தூரத்தே கடும் பச்சைக் குரக்கன் வயல்கள்! வாழைகள்!

அப்பால், தொடுவானை மறைத்து நிற்கும் பனந்தோப்புக்கள்

கிளிகள் இருந்தும், பறந்தும் இசை பாடும் இனிய தென்னைகள்!

இது தமிழீழக் காட்சி!

இங்கு உரம் கொண்ட நெஞ்சங்கள், மிடுக்கான கரங்கள்! பசு மாடு, குடில்கள்!

- இவை உலகுக்கு உயர் வாழ்வைப் புகட்டி நின்றன!

கொதித்து வந்த காற்று மேலும் அமைதி பெற்றது, தெளிவு பெற்றது.

''வடக்கு மாகாணம்எதுவும் இல்லாத வரண்ட மாகாணம். நாங்கள் பொருள் வழங்காவிட்டால் அவர்கள் மண்ணைத்தின்று சாக வேண்டியது தானே'' என்றாரே அந்த அதி உத்தமர்! அதனை நான் சுமந்து வந்தேனே-

அவர் சொல்லைப் பெரிதென மதித்து, என இப்போது சிரித்தது காற்று!

அது உலவி வந்த போது இடிந்த வீடுகள், சிதைந்த பாடசாலைகள் பல தெரிந்தன.

ஆனால் புதிய எண்ணெய் வகைகள், உர வகைகள், தொழில் முறைகள் திண்ணிய நெஞ்சங்களின் கண்டு பிடிப் பாகி மண் வாழ்ந்து கொண்டிருந்தது! குடாநாடும் வன்னியும் மன்னாரும் திரு மலையும் தென் தமிழீழமும் புதிய உரப் உறுதி நடுவே வாழ்ந்து கொண் டிருந்தன!

வயலும் காடும் கடலும் தம் வளம் கூறி நின்றன!

மண்வெட்டி பிடித்த கைகளும் ஆயுதம் தாங்கிய கரங்களும் இணைந்து நாட்டை ஆக்கிக் கொண்டிருந்தன; தம் உயிர் ஈந்து உரமூட்டி உயர்த்திக் கொண்டிருந்தன.

"இது தமிழீழமே!" எனக் காற்று தன்னை மறந்து கூவி உயர்ந்தது.

இலங்கையின் அதி உத்தமரோ, அங்கே தனது கைகளை வான் நோக்கி ஏந்தியபடி பிறநாட்டு உதவிகளுக்காக மன்றாடிக் கொண்டிருந்தார்!

அந்த அந்நியருக்கு வடக்கு எதுவு மற்ற மண்ணாக இருக்கலாம். அவர் அவ்விதமே இருக்கட்டும்!

எமக்கு இது வெறும் மண் அல்ல; வரண்ட மண்ணும் அல்ல!

இது வளம் மிக்க, எம் சொந்த மண்! □□

## பனை நடுகை முயற்சியில் பாரியவளர்ச்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபி விருத்திப் பகுதியால் மேற்கொள்ளப்பட்டுவரும் பனை நடுகைத் திட்டத்தின் விளைவாக 1993ம் ஆண்டுக்கான பனை விதை நடுகைக் காலப்பகுதியில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான பனை விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

பனைவளம் சார்ந்த நிறுவனங்களுக்கூடாகவும் வேறு பல பொது ஸ்தாப னங்கள், தொண்டர் அமைப்புக்கள், சாரணர்குழுக்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றுக்கூடாகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் இப் பனை நடு கைத் திட்டமானது கடந்த சில வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்படி நடவடிக்கையின் மூலம் 1991ம் ஆண்டு 150 000 பனை விதைக ளும் 1992ம் ஆண்டு 257 000 பனை விதைகளும் 1993ம் ஆண்டுக்கான நடுகைக் காலத்தில் 345000 பனை விதைகளும் நாட்டப்பட்டுள்ளன.

இவை யாழ் குடாநாட்டுப் பகுதிகளிலும், வன்னி, முல்லை, மன்னார், வவு னியா மாவட்டங்களிலும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் ஈழம் கோருகின்றனர். என்றுமே அவர்களுக்கு ஈழம் கிடைக்காது. வடக்கு கிழக்குக்கு ஈழம் தரப்படும் எனக்கூறி தெற்கிலுள்ள தமிழர்களை அங்கு செல்லுமாறு நாம் கோரினால் என்ன நடக்கும்? உண்பதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது? மண்ணை மட்டும்தான் அவர்கள் தின்ன வேண்டும். அங்கு வருமானம் தரும் வளங்கள் என்ன? வடக்கு வளம் கொண்ட பூமி அல்ல. சகல பொருட்களும் தெற்கிலிருந்தே அனுப்ப வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு உணவுப் பொருட்கள் அங்கு அனுப்பப் படாவிட்டால் அங்குள்ளவர்கள் பட்டினியால் வாட வேண்டி ஏற்படும்.

— ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா —

# தமிழீழ மக்களை பட்டினி போட வைக்காத தமிழீழ பொருண்மிய வளங்கள்

ஸ்ரீலங்காவில் தமிழீழம், பொருண்மிய வளவாய்ப்புக்களைக் கொண்டிருப்பதுடன் அதன் நுகர்தலைப் பொறுத்தவரை பெருமளவில் முன்னேற்ற நிலை காணப்படுவதை மறுக்க முடியாது. செழிப்பான மண் வளத்தினைக் கொண்டிருக்கும் தமிழீழப் பிரதேசத்தில் ஸ்ரீலங்காவின் நிலப்பரப்பில்செழிப்பான மண்வளத்தைக் கொண்ட 28.0 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலப்பரப்பினைக் கொண்டிருப்பதுடன் வரலாற்றுக் காலத்தில் உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளில் தன்னிறைவை கொண்டிருந்தது மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசின் அடாவடித்தனமான பொருண்மியத் தடை, எரிபொருட்தடை, கடலில் மீன் பிடிப்பதற்குத்தடை, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பிரதேசங்களிலிருந்து இராணுவத்தின் உதவியுடன் அகதிகளாக்கப்பட்டு வருகின்ற நிலை போன்ற பல அசாதாரணக் காரணிகளின் விளைவாக தமிழீழத்தின் உச்ச உற்பத்தியளவை பெற்றுக் கொள்ள முடியாது விடினும் தமிழீழ உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது என்றால் மிகையாகாது.

பொதுவாக தமிழீழத்தில் உணவுப் பயிர்ச்செய்கை, உப உணவுப் பயிர்ச்செய்கை

☐☐ தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ☐☐

நூலகம் ... யாழ்ப்பாணம்



யான சிறுதானியவகை, கிழங்குவகை பருப்பு வகை, மரக்கறி வகை, பழவகை போன்றவைவும், கால்நடை வளம், கடல்வளம் போன்ற பலவற்றிலும் ஸ்ரீலங்காவோடு ஒப்பிடும் போது சார்பு ரீதியாக அதிகரித்தே காணப்படுகின்றது.

குறிப்பாக நெல் (அரிசி) உற்பத்தியினை இறுதியில் தரப்பட்டுள்ள அட்டவணை துலக்கமாகத் தெரிவிக்கின்றது.

அதாவது தமிழீழப்பிரதேசத்தில் மொத்த நெல் உற்பத்தி 609000 மெற்றிக் தொன்னாகும். நெற்களஞ்சியம் என வர்ணிக்கப்படும் தென்தமிழீழத்தில் மக்கள் அனுபவிக்கும் பல்வேறு அனர்த்தங்களின் மத்தியிலும் நெல் தேவையினை நிறைவு செய்வதுடன் மிகையாகவுள்ள நெல் உற்பத்தி ஸ்ரீலங்கா அரசிற்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ளல் அவசியமாகும்.

வடதமிழீழத்தில் பெருமளவில் நெல் லுற்பத்தி நிலங்கள் உற்பத்திக்குட்படுத்தப்படாத நிலையிலும் கூட 127000 மெற்றிக் தொன்னை உற்பத்தி செய்துள்ளது. இப்பிரதேச மக்களுக்கு மேலதிகமாக 67610 மெற்றிக் தொன் வேண்டப்படுகின்றது. எனவே, தென் தமிழீழத்தின் உற்பத்தியினைப் பெற்றுக் கொள்வோமாயினும் கூட 234750 மெற்றிக் தொன் நெல்லானது மிகையாகக் காணப்படுவதுடன் ஏற்றுமதி செய்து பெருமளவில் அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாய்ப்புண்டு.

வடதமிழீழத்தில் நெற்செய்கைக்கு உட்படுத்தக்கூடிய நிலப்பரப்பாக 99055 கெக்ரேயர் காணப்படுகின்றது. மேற்படி நிலப்பரப்பினை பூரணமாக உற்பத்தியிலீடுபடுத்துவோமாயின் சராசரி ஒரு கெக்ரேயருக்கு 2.5 மெற்றிக் தொன் நெல்லினைப் பெற்றுக் கொள்வதுடன் மொத்தமாக 247637 மெற்றிக் தொன்னை உற்பத்தி செய்ய முடியும். வட தமிழீழ மக்களின் தேவையினை விட 53027 மெற்றிக் தொன் மிகையாகக் காணப்படுவதுடன் தென் தமிழீழத்தில் மிகையான உற்பத்தியை மேற்கொள்ளின் தற்போதைய உற்பத்தியிலும் பார்க்க பெருமளவிற்கு உற்பத்தியை காணலாம்.

இது காரணமாக தமிழீழ மக்களின் உணவின் முக்கிய கூறான நெல்லின் மிகை உற்பத்தி 355387 மெற்றிக் தொன்னாக அதிகரிப்பதுடன் பெருமளவிற்கு வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். இதனை வென்றெடுப்பதற்கு உற்பத்தியில் ஈடுபடக்கூடிய நிலங்களைப் பயன்பாட்டுக்கு கொண்டு வரவும், விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது.

உப உணவுப் பயிர்ச்செய்கை உற்பத்திகளான வெங்காயம், மிளகாய் மற்றும் உற்பத்திகளைப் பொறுத்தவரை 1970 களில் தமிழீழ நுகர்வுக்கு மேலாக ஸ்ரீ லங்காவின் தேவையினைக்கூட பூர்த்தி செய்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா அரசினால் போக்குவரத்துத் தடை உட்பட பல்வேறு தடைகளின் விளைவாகவும் தாராள இறக்குமதிக் கொள்கையின் விளைவாகவும் மிகை உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியாதுள்ள போதிலும் எதிர்காலத்தில் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுமாயின் தன்னிறைவுக்கப்பால் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்பலாம்.

ஸ்ரீலங்காவின் கடற்பரப்பில் 60% சதவீதத்திற்கு மேற்பட்ட கடற்பரப்பு தமிழீழத்திற்கு சொந்தமானதாகக் காணப்படுவதுடன் மீன் பிடித்தலுக்கான வள வாய்ப்புக்களும் இப்பிரதேசங்களிலேயே காணப்படுகின்றது. தமிழீழப்பிரதேசத்திலேயே வோஜ், பேதுரு ஆகிய இரு கண்டமேடைகளும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா அரசின் பல்வேறு தடைகளுடன் கடல்வலயத் தடையை விதித்த போதிலும் 1990ம் ஆண்டில் தமிழீழ மீன் உற்பத்தி 51996 மெற்றிக் தொன்னாகவிருந்தது. இது 1983ம் ஆண்டில் 104,320 மெற்றிக் தொன்னாகவிருந்தது, என்பது குறிப்பிடத்தக்கது. 1990ம் ஆண்டில் மக்களின் நுகர்வு 40000 மெற்றிக் தொன்னாகவிருந்தது. அதாவது மிகை உற்பத்தியான 11996மெற்றிக் தொன் கொழும்புச் சந்தைக்கே எடுத்துச் செல்லப்பட்டது என்பதை இங்கு கவனத்திற்கெடுத்து கொள்ளல் வேண்டும். தற்போதைய நிலையில் தமிழீழ மீன் உணவுப் பொருட்கள் மிகக் குறைவாக அனுப்பப்படுவதால் அங்கு கோழி இறைச்சியின் விலையோடு ஒப்பிடும் போது மீனின் விலை பல மடங்கு அதிகமாகவிருக்கின்றது என சந்தை நிலவரங்களை ஆதாரம் காட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது.

1993ம் ஆண்டு தமிழீழப் பிரதேசத்தின் மீன் உற்பத்தியானது 1990ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 50.0 சதவீதமேயாகும். கடற்படையின் அச்சுறுத்துதல் தவிர்க்கப்பட்டு நவீன தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதுடன் மீனவத் தொழிலாளருக்கு தொழில் புரிய உதவிகள் வழங்கப்படும் பட்சத்தில் தமிழீழத்தின் வருமானத்தின் பெரும் பங்கினை மீன் பிடித் தொழிலிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

*(இங்கு தரப்பட்ட புள்ளிவிபரங்கள் யாவும் ஸ்ரீலங்கா அரசால் வெளியிடப்பட்ட தரவுகளில் இருந்து திரட்டப்பட்டது என்பதைக் கவனிக்கவும்)*

## தமிழீழத்தின் நெல் உற்பத்தி 1990ம் ஆண்டு

| | வடதமிழீழம் மெ.தொ | தென்தமிழீழம் மெ.தொ | தமிழீழம் மெ.தொ |
|---|---|---|---|
| நெல் உற்பத்தி | 127000 | 482000 | 609000 |
| தேவையான நெல் | 194610 | 179640 | 374250 |
| மிகை உற்பத்தி | — | 302360 | — |
| மேலதிக தேவை | 67610 | — | — |
| மிகை உற்பத்தி (தமிழீழம்) | — | — | 234750 |


□□

ஆதாரம்

வெளியீடு: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

தொடர்புகளுக்கு: "ஆதாரம்"
முதன்மைச் செயலகம்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தாவடி.

# குறுக்கெழுத்துப் போட்டி இல 7




- இக் குறுக்கெழுத்துப் போட்டியில் சகலரும் வயதெல்லையின்றிக் கலந்து கொள்ளலாம்.

''ஆதாரம்''
முதன்மைச் செயலகம்
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
தாவடி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும் தபால் உறையின் இடதுபக்க மூலையில் ''குறுக்கெழுத்துப் போட்டி இல 07'' எனக் குறிப்பிடவும்.

- முடிவுத் திகதி:- 30-06-1994
- சரியான விடை எழுதும் மூவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

### மேலிருந்து கீழ்

1. சேனல் கிட்டு அவர்களால் வெளிநாட்டிலிருந்து பல நல்லின வித்துக்கள் அனுப்பப்பட்டன. அவற்றில் இதுவும் முக்கியமானது.
2. ஒருநாட்டின் முதுகெலும்பு இதுஎன்பர்
3. தீயின் எச்சமாய் இதுவும் வரலாம் யானையையும் இப்படி அழைப்பர்.
4. இது நிலையாய் பிடித்து விட்டால் உயிரினங்கள் அழிந்துவிடும்.
5. இயற்கையின் மாற்றத்தை இப்படியும் அழைப்பர்.
6. ஒரு நாட்டின் மழைவீழ்ச்சியை இதுவும் பேணுகிறது. (கீழிருந்து மேலாக உள்ளது)
7. முன்னைய காலத்தில் எழுத்தாணி கொண்டு இதில்தான் எழுதுவார்கள்.
8. நீர்த்தாவரம். இதன் கிழங்கில் கறி சமைக்க முடியும்.
9. சட்டத்தினை மீறினால் சில வேளை இங்கும் செல்ல வேண்டிவரும்.

### இடமிருந்து வலம்

1. புரதச்சத்து நிறைந்த அவரையினத் தாவரத்தில் இதுவும் ஒன்று.
2. தமிழரின் திருநாள் விவசாயியின் பெருநாள்.
7. இதன் சீர்கேட்டால் பெரும் அழிவுகள் ஏற்படும்.
9. இதனை கல்லிலும் செதுக்குவார்கள்.
10. ஒரு உயிரின் ஆரம்பமே இதுவாகும்.
11. தாவரங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக இது கட்டப்படுகின்றது.
12. காரச் செறிவு கொண்டது பொதுவாக கறி சமைக்கும்போது இதை தூளாக்கியும் பயன்படுத்துவர்.
13. எந்த வேலைத்திட்டத்திற்கும் இது முக்கியமானது.
14. ஒரு விடயத்தை மக்களுக்கு அறியப்படுத்த அரசர் காலத்தில் இதனையே பயன்படுத்தினார்கள். சில இடங்களில் இப்போதும் பயன்படுத்துகின்றனர்.

# எங்கள் மண் இளைக்காது!



கவிதை

□□ வேலணையூர் சுரேஷ் □□

வன்னிமண் வயற்காட்டில்
விளையும் நெல்லரிசி
வாழ்மக்கள் பசிபோக்கும்.
மன்னார் மட்டுநகர்... கடலேறி
மிதந்துவரும் மீன் உண்டு.
எங்கள் மண் என்ன வளம்!
எண்ணிப் பார்க்கவே மயிர்சிலிர்க்கின்றது.
''தன்பாட்டில் நாம் வாழ
தன்னிறைவு இங்குண்டு''
பின்னென்ன குறையிங்கே?

மண்நிறைய வளமிருக்க
மண்டியிட்டு வாழோம்; பார்!
மேச்சலிட்டுத் துள்ளிவரும் பசுவெல்லாம்
மடிநிறைய பால்சுமந்து வரும் வளநாடு.
ஆச்சி ஆறவைத்துப் பால் குடித்ததின் நாடு.

அன்றெங்கள் பாட்டன் ஓடியற்கூழ்குடி த்து
ஆடிப்பாடித் துயிலெடுத்த நிலமிதுதான் ா.
''தேன் பாய்ந்து மீன்பாடும்'' முல்லை த்
திருநாட்டைப் போலொன்றைத்
தேடிப் பெறுவதற்குக் கோடிபுண்ணிய ம்
செய்தாலும் கிடைக்குமோ உங்களுக்கு ம்?

'என் கப்பல் உணவின்றேல்
மண்தின்ன வேண்டும்''

''அங்கென்ன வளமுண்டு?
இங்கெல்லோ அதுவுண்டு''

என்றுரைத்த பெரியவரே
இங்கே வந்து பாருங்கள்!
இங்கென்ன இல்லையென்று
இனிப், பார்த்துவிட்டுக் கூறுங்கள்!

கங்குல் மட்டையும்...
காஞ்சோண்டி மரக் கொப்புமா
தங்கள் கண்ணிற்கு தெரிந்தது?
அங்கிருந்து கொண்டு...
பொங்கும் வளபூமியைப் பார்த்து
இப்படிச் சொல்ல எப்படி முடிந்தது?
''வடக்கும் கிழக்கும்''
வளமில்லா நாடென்றால்
விட்டுவிடப்பா எங்களிடம்!
பட்டினி கிடந்தாலும் பசிக்குதென்று
வரமாட்டோம்.

எதிர்த்தடைகண்டுஎங்கள்மண் இளைக்காது!
எதையும் ஏலுமென்று ..
சாதிக்கும் வீரர்தம் உழைப்பால்
உதயமாகும் ''தமிழீழம்'' நாளை
உங்களுக்குப் பதில் சொல்லும்!
அதுவரையும் போரிடுவோம்!
எதுவரினும் நேரிடுவோம்!! □□

## முத்தையன்கட்டில் சந்தை திறக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன் கட்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக்குழுவினால் சந்தை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சந்தை அமைக்கப்பட்டதனால் முத்தையன் கட்டு பிரதேச மக்களும் விவசாயிகளும் பெரும் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர்.

இச்சந்தை அமைக்கப்பட முன்னர் இப்பகுதி விவசாயிகள் தமது உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்த 5 மைல் தொலைவில் உள்ள ஒட்டிசுட்டானுக்கோ அல்லது 12 மைல் தொலைவில் உள்ள புதுக்குடியிருப்புக்கோ செல்லவேண்டியிருந்தது. இப்பகுதி விவசாயிகளின் இப்பெரும் இடர்பாட்டினை இச் சந்தை நிவர்த்தி செய்துள்ளதோடு முத்தையன்கட்டு மக்களிற்கும் சிறந்த சேவையினை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொது ... நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.

ஆதாரம்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கைத்தொழில்

□□ புதுவையூரான் □□

முல்லைத்தீவு மாவட்டத்தில்
பாரிய கைத்தொழில்களை
விருத்தி செய்வதற்கு
ஏற்ற மூல வளங்கள்
இருக்கின்றன.
கடற்கரையோரம் சார்ந்த
இடங்களில் 'கண்ணாடி
உற்பத்திக்கு
ஏற்ற
வெண்மணல் உண்டு;

ஓடு, செங்கட்டி
உற்பத்திக்கு ஏற்ற
களிமண்
மட்பாண்ட உற்பத்திக்கு
ஏற்ற களிமண்
மரத்தளபாட உற்பத்திக்கு
ஏற்ற மரவளம்
தெங்கு, பனை வளங்கள்
போன்ற பல வளங்க்ள்
நிறைய உண்டு.

முல்லைத்தீவு மாவட்ட கைத்தொழிற்துறை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. கைத்தொழில் விருத்திக்கான வாய்ப்பு வளங்கள் இங்கு காணப்படுகின்ற போதிலும் மக்களின் ஆர்வம் முழுக்க முழுக்க விவசாயத்துறையிலேயே இருந்து வருகின்றது. கனிய வளங்கள் மற்றும் பௌதீக வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில்கள் இங்கு மிகக் குறைவாகவே உள்ளன. இங்கு மேற்கொள்ளப்படும் கைத்தொழில்களை மூன்று பிரிவுக்குள் வகைப்படுத்த முடியும்.

1. குடிசைக் கைத்தொழில்
2. இலகு கைத்தொழில்
3. தொழிற்சாலைக் கைத்தொழில்

ஓரளவுக்குச் சுற்றாடலில் சில மூலப் பொருட்கள் பெறத்தக்கதாக இருந்தும் குடிசைக் கைத்தொழில் கூட மிக ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றது.

மர அரிவு வேலை, கிடுகு பின்னுதல், தச்சுத்தொழில், மட்பாண்ட உற்பத்தி, பாலிலிருந்து நெய் எடுத்தல், நகை செய்தல், தும்புத்தொழில், பைகள் பின்னுதல், பன்னவேலை போன்ற கைத்தொழில்களே இங்கு மேற் கொள்ளப்படுகின்ற குடிசைக் கைத்தொழிலாகும். காட்டு மரங்களை வீட்டுத் தளபாடங்களுக்காக அரியும் தொழில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல கிராமங்களில் காணப்படுகின்றது. காட்டு மரவளம் இங்கு இருப்பதனால் இத்தொழில் ஓரளவுக்குப் பரவலாக வளர்ச்சி பெற்றுள்ளது.

தென்னை மரங்கள் வளர்க்கப்படும் இடங்களில் எல்லாம் குடிசைமட்டத்தில் கிடுகு பின்னுதல் நடைபெறுகின்றது. கிடுகினால் வேயப்படும் வீடுகளே முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகமாக உள்ளமையினால் கிடுகு பின்னுதல் எல்லா இடங்களிலும் சுய தேவைக்காகவும் வியாபார நோக்கிலும் நடைபெறுகின்றது. பெண்கள் ஆண்

கள் இரு பாலாரும் இத் தொழிலில் ஈடு படுகின்றனர்.

புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் தென்னந் தோட்டங்கள் அதிகளவில் உள்ள மையினால் இங்கு கிடுகு பின்னுதலும் அதிகளவில் நடைபெறுகின்றது.

தச்சுத் தொழிலானது பாரம்பரியமா கவே விவசாய உபகரணங்கள் (மண்வெட்டி, கோடரி, கத்தி, உழுகலப்பை) மாட்டு வண்டி, வீட்டு உபகரணங்கள் என்பவை செய்வதற்காகப் பெரிய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, ஒட்டு சுட்டான், ஒலுமடு, மாங்குளம், விசுவமடு, பாண்டியன்குளம், யோகபுரம், உயிலங்குளம் போன்ற கிராமங்களில் தச்சுத்தொழில் நடைபெறுகின்றது. ஆண்களே இத்தொழில் களை மேற்கொள்கின்றனர்.

மட்பாண்ட உற்பத்தியைப் பொறுத்த வரையில் இம் மாவட்டத்தில் தேவைக்காக உள்ளூரில் காணப்படும் களிமண்ணைப் பயன்படுத்தி இத்தொழில் மேற்கொள்ளப் படுகின்றது. புதுக்குடியிருப்பு, யோகபுரம், பாண்டியன்குளம், உயிலங்குளம், முள்ளிய வளை போன்ற கிராமங்களில் இத்தொழில் மேற்கொள்ளப்படுகின்றது.

கனிய வளத்தைப் பயன்படுத்தி (களி மண்) இங்கு மேற்கொள்ளப்படும் ஒரே ஒரு கைத்தொழிலாக மட்பாண்டக் கைத் தொழிலே இங்கு காணப்படுகின்றது. சிறு குடிசைகளில் 5—10 பேர்வரை ஆண்கள் இருந்து சூளை அமைத்து, சட்டி, பானை என்பன செய்கின்றனர்.

பாலில் இருந்து மோர் தயாரித்தல், நெய் எடுத்தல், பரவலாகப் பாலுக்காக மாடுவளர்க்கப்படும் இடங்களில் மேற்கொள் ளப்படுகின்றது. பெண்களே இதனைச் செய் கின்றனர். பசு நெய்க்கு அதிக விலை யும் கேள்வியும் இருப்பதனால் நெய் எடுத் தல் இலாபகரமானதாகும். புதுக்குடியிருப்பு, குமுழமுனை, ஒட்டுசுட்டான், ஒலுமடு, கற்சிலைமடு கிராமங்களில் மாடுகள் அதிகம் வளர்க்கப்படுவதனால் இத்தொழில் இப் பகுதிகளில் பெண்களினால் அதிகம் மேற் கொள்ளப்படுகின்றது.

நகைத்தொழிலைப் பொறுத்தளவில் முள்ளியவளை, தண்ணீரூற்று, புதுக்குடியி ருப்பு, துணுக்காய், பாண்டியன்குளம், மாங் குளம் போன்ற கிராமங்களில் நடைபெறு கின்றது. யாழ்ப்பாணத்துடன் அதிகம் தொடர்புடையவர்களே இத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

தென்னை வளர்ப்பில் முல்லைத்தீவு மாவட்டம் ஓரளவு முன்னேற்றம் கண்டி ருப்பதனால் கயிறு திரித்தல், விளக்குமாறு செய்தல் என்பன குறிப்பாக புதுக்குடியி ருப்பு, செம்மலை, ஆனந்தபுரம், சுதந்திர புரம் போன்ற கிராமங்களில் நடைபெறு கின்றன.

நகரப் பகுதிகளில் கடைகள் வைத்து, ஆடைகள் தைக்கும் தொழிலில் ஈடுபடும் தன்மையைப் போல, கிராமங்களில் வீடு களிலேயே தையல் வேலைகள் இடம் பெறு கின்றன. தையல் இயந்திரம் வைத்திருக்கும் குடும்பம் ஒன்று ஏறக்குறைய 25—50 வரை யான குடும்பங்களுக்கு உடுபுடவைகளைத் தைத்து கொடுக்கின்றனர். இதற் கான தையல் பயிற்சிகளும் நடைபெறுகின் றன. றெட்பானா, சர்வோதயம், இளைஞர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் என்பன தையல் பயிற்சிகளைப் பெண்களுக்கு வழங்கி வருகின் றன. கால அடிப்படையில் 3—6 மாதம் பயிற்சி இதற்கு வழங்கப்படுகின்றது.

இதைவிட பனை ஓலையைப் பயன் படுத்தி பாய் இழைத்தல், பன்ன வேலை கள் என்பனவும் பனை வளம் உள்ள இடங் களில் செய்யப்படுகின்றன. கடற்கரையோரக் கிராமங்களான மாத்தளன், அம்பலவன்

பொக்கணை, வலையன்மடம், முள்ளிவாய்க் கால் போன்ற கிராமங்களிலும், ஒட்டுசுட் டான், கற்சிலைமடு, மணவாளன்பட்ட முறிப்பு, புதுக்குடியிருப்பு போன்ற கிராமங் களில் பனைவளம் அதிகம் காணப்படுகின் றது. புதுக்குடியிருப்பு, வலையன்மடம் கிரா மங்களில் பனை ஓலையைக் கொண்டு பன்ன வேலை செய்கின்றனர்.

வீட்டுத் தளபாடங்களான மேசை, கதிரை, கதவு, யன்னல் மற்றும் பொருட் கள் யாவும் செய்யும் தொழிலும் பரவ லாக மேற்கொள்ளப்படுகின்றன. புதுக்குடி யிருப்பு, விசுவமடு, முள்ளியவளை, மாங் குளம், யோகபுரம் ஆகிய கிராமங்களில் வீட்டுத் தளபாட உற்பத்தி இடம்பெறு கின்றது.

இவ்வாறு பல்வேறு தொழில்கள் குடிசைக்கைத்தொழிலாக மேற்கொள்ளப் பட்டிருந்தபோதிலும், வியாபார நோக்கி லான தொழில் விருத்தியை இங்கு காண முடியாதுள்ளது. சுற்றாடலில் உள்ள மரங் கள், பயிர் உற்பத்திகள் (அரிசி, பயறுவகை, நிலக்கடலை, மரமுந்திரிகை, பருப்பு) தெங் குப் பொருட்கள், பனம் பொருட்கள் மண் வளம் என்பவற்றைப் பயன்படுத்தி மேலும் சிறுகைத்தொழிலை வர்த்தக நோக்கிலும் விருத்தி செய்ய முடியும். கடன் வசதி, ஊக்குவிப்பு, மற்றும் பயிற்சி நெறிகள் வழங்கப்படுவதுடன் போதியளவு சந்தை வாய்ப்பு ஏற்படுத்துதல் மூலமும் குடிசைக் கைத்தொழிலை மேலும் விருத்தி செய்ய முடியும்.

இலகு கைத்தொழிலைப் பொறுத்த வரை இங்கு கைத்தொழில்கள் வளர்ச்சி பெறவில்லை. குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு சில கைத்தொழில்கள் இங்கு சில கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கு கின்றன. அவையுங்கூட வளர்ச்சிபெற்ற கைத்தொழிலாக இல்லை.

தானியம் அரைத்தல், உணவு தயாரித் தல், பேக்கரி தொழில், பனம் பொருள் உற்பத்தி தொழில், செங்கல் உற்பத்தி, பிரப்பம் பொருள் தயாரித்தல், பாய், விரிப்புப்பொருள் உற்பத்தி போன்ற கைத் தொழில்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறுகின்ற இலகு கைத்தொழில் களாகும்.

இலகு கைத்தொழில்கள் சிறிய மூலத னத்துடன் சிறு தொகை ஊழியர்களைப் பயன்படுத்திச் சிறிய இயந்திரப் பயன்பாட் டுடன் மேற்கொள்ளப்படும் தொழில்களா கும். பனம் பொருட்களான பதநீரை போத் தலில் அடைத்தல், கள்ளினை போத்தலில் அடைத்தல், பனங்கட்டி உற்பத்தி என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

தெங்கு பனம் பொருள் வடிசாலை புதுக்குடியிருப்பு கிராமத்தில் அமைக்கப்பட் டுள்ளது. செங்கல் உற்பத்தி தொழில் ஒட்டு சுட்டான், பனங்காமம் கிராமங்களில் இடம் பெற்றது. இன்று செங்கல் உற்பத்தி 1990 யூன் மாத நடுப்பகுதிக்குப்பின் வீழ்ச்சிய டைந்துள்ளது, பிரம்புகளைப் பயன்படுத்தி கூடை, பாய், நிலவிரிப்பு போன்ற பொருட் கள் சிறு இயந்திர உதவியுடன் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவை தவிர சவர்க்காரம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று முள்ளியவளை கிராமத்தில் இயங்கிவந்த போதி லும் பின்பு இத் தொழிற் சாலை மூடப்பட்டுவிட்டது. பயிர்ச்செய்கை மூலப் பொருட்கள், காட்டுவளம் மற்றும் கனிய வளங்கள் (கனிமணல்) என்பன இங்கு பரந்து காணப்படுவதனால் இலகு கைத்தொழிலைச் சிறந்த முறையில் அபிவி ருத்தி செய்ய முடியும். குறிப்பாகச் சொன் னால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கைத் தொழில் விருத்தியானது இலகு கைத் தொழில்களின் விருத்தியாகவே அமையு மென எதிர்பார்க்கலாம்.

தொழிற்சாலைக் கைத்தொழிலை அமைப்பதற்கு ஏற்ற மூலவளங்கள் காணப் படுகின்ற போதிலும் குறிப்பிடக் கூடிய

ஒரே ஒரு கைத்தொழிற்சாலை ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள செங்கல் ஓடு தொழிற்சாலையாகும். அங்கும் 1990 யூன் மாதத்துக்குப் பின் உற்பத்தி இடம் பெறவில்லை. ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை அங்கு அமைவதற்கு சுற்றாடலில் காணப்பட்ட களிமண்ணும் ஓடு, செங்கற்களுக்கான அதிக சந்தை வாய்ப்பும் காரணமாகும்.

இத் தொழிற்சாலைக்கு தேவையான பிரதான மூலப் பொருளான களிமண் இலகுவாக சுற்றாடலிலிருந்து பெறப்பட்டது. அத்துடன் போதியளவு நன்னீர் வசதியும் இருந்தது. நீர் மின் சக்தி உற்பத்தி பாதிக்கப்பட்டமையே இக் கைத்தொழில் மூடுவதற்கு பிரதான காரணமாகும்.

இங்கு பாரிய கைத்தொழில்களை விருத்தி செய்வதற்குகந்த மூலவளங்கள் இருக்கின்றன. கடற்கரையோரம் சார்ந்த இடங்களில் கண்ணாடி உற்பத்திக்கேற்ற வெண் மணல், ஓடு செங்கட்டி உற்பத்திக்கேற்ற களிமண், மட்பாண்ட உற்பத்திக்கேற்ற களிமண், மரத்தளபாட உற்பத்திக்கேற்ற மரவளம், தெங்குப் பொருள், பனம்பொருள் உற்பத்திக்கேற்ற தென்னை பனை வளம் போன்ற இயற்கை வளங்கள் தொழிற்சாலைக் கைத்தொழிலுக்கு ஏற்றனவாகவுள்ளன.

பாரிய அளவான மூலதனம், அரச ஊக்குவிப்பு நடவடிக்கைகள், தொழில் நுட்பரீதியான பயிற்சிகள் என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் பாரிய கைத்தொழில் சாலைகளை வர்த்தக அடிப்படையில் உருவாக்க முடியும்.

பொதுவாக நோக்கின் முல்லைத்தீவு மாவட்டக் கிராம மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் கைத்தொழில் மிகக் குறைந்த இடத்தையே வகிக்கின்றது. விவசாயத்துடன் ஒப்பிடும் போது கைத்தொழில் மூலமான வருவாய் 95% மான குடும்பங்களுக்கு பூச்சியமாகவே இருக்கின்றது. தொழில் வாய்ப்பிலும் கைத்தொழில் துறை மிகக் குறைந்த மக்களுக்கே இடம் கொடுப்பதாகவுள்ளது.

பெண்கள் கைத்தொழில் துறையில் ஈடுபடுவது மிக மிகக் குறைவாகும். பெண்களுக்கு கைத்தொழில் துறையில் ஆர்வம் குறைவு என்பதைவிட கைத்தொழிலுக்கான ஊக்குவிப்பு, வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமையே பிரதான காரணமாகும்.

வர்த்தகத்தில் ஈடுபட்ட இளைஞர்களில் பெரும் பங்கினர் வேலை இன்றியும், விவசாயிகளில் பெரும்பங்கினர் பருவகால வேலை வாய்ப்பு இன்றியும் உள்ளனர். இவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பிரதான துறையாக இங்கு கைத்தொழிலை ஊக்குவிக்க முடியும். உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி உச்ச இலாபத்தை கைத்தொழில் விருத்தி மூலம் பெறமுடியும். வீணே கிடக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தவும் இதன் மூலம் வழி ஏற்படும்.

கிராமிய மக்களின் பொருளாதார செயல் முறைகளிலும், வருமான வழிகளிலும், தொழில் வாய்ப்பிலும் கைத்தொழில் துறையின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டிய நிலை உருவாக்கப்பட வேண்டும்.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான வள வாய்ப்புக்கள் நிறைய இருக்கின்றன. கனியவளம், விவசாயம், மற்றும் வளங்களைப் பயன்படுத்தும் திட்டங்களினாலேயே கைத்தொழிலை இங்கு விருத்தி செய்யலாம். அத்துடன் கைத்தொழில் பயிற்சி சம்பந்தமான நடவடிக்கையும் அவசியமானது.

கைத்தொழில் விருத்திக்கேற்ற கனிய வளங்கள், பயிர்ச்செய்கை மூலப் பொருட்கள், காட்டுவளம், கால்நடை உற்பத்தி என்பன பற்றிய முழுமையான ஆய்வு நிகழ்த்தப்பட்டு அளவீடுகள் செய்யப்பட்டு கைத்தொழில் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் முல்லைத்தீவு மாவட்ட கைத்தொழில் துறையின் பின்தங்கிய நிலையை நீக்கி அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். □□

சிறுகதை

# மாற்றம்

☐ தாமரைச்செல்வி ☐

பிரயாணம் இவ்வளவு தூரம் கஷ்டமாய் இருக்கும் என்று நித்தியானந்தன் நினைத்தும் பார்க்கவில்லை.

வவுனியாவில் ரயிலிலிருந்து இறங்கியதிலிருந்து தாண்டிக்குளம் கடந்து ஓமந்தை வரை வருவதற்குள் அத்தனை அலைச்சல் பட வேண்டியிருந்தது.

இவ்வளவு நாளும் இந்த கஷ்டங்களை பத்திரிகை மூலமாகவும் மற்றவர்கள் சொல்வதன் மூலமாகவும் அறிந்திருந்ததை இப்போது அனுபவத்தில் உணரமுடிந்தது.

தொண்ணூறு ஜூன் சண்டையின் பின் பரந்தனில் இருந்த அவர்களின் வீடு உடைந்து போன பிறகு அப்பா அம்மா தங்கைகளுடன் திருவையாறில் இருக்கிறார்களாம்.

இப்போது திடீரென்று அவர்கள் முன் நின்றால் அவர்களுக்கு எப்படி இருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

அடிபட்ட பந்து மாதிரி திரும்பித்திரும்பி வர வேண்டி தன் தலையில் எழுதப்பட்டிருப்பது மனதை அதிகம் வருத்தியது.

பன்னிரண்டு வருஷங்களாக அவனும் வெளிநாடு செல்ல அலைகிறான்.

இருபது வயதிலிருந்து ஆரம்பித்த அலைச்சல் அது. ஒரு தடவை சிங்கப்பூரில் பிடிபட்டு ஆறுமாதம் ஜெயிலில் இருந்திருக்கின்றான்.

அடுத்த தடவை லெபனான் பாதையில் பிடிபட்டு இருண்ட அறைக்குள் அடைந்து கிடந்து அடி உதை வாங்கி நாலு மாதம் சித்திரவதை அனுபவித்திருப்பான்.

பன்னிரண்டு வருஷங்களுக்குள் இரண்டு ஏஜென்சியிடம் காசு கட்டி ஏமாந்து இப்போது மூன்றாவது ஏஜென்சியிடமும் ஏமாந்து போய் மொஸ்கோவில் ஒன்றரை வருஷமாக நின்று அலைந்து விட்டு போன வெள்ளி திரும்பி இலங்கைக்கு வந்து விட்டான்.

இனிமேல் வெளிநாட்டு ஆசையே வேண்டாம் என்று தீர்மானித்த போது ஏழெட்டு லட்சங்களும் அவனது வயதும் கரைந்து போய் விட்டிருந்தது.

முப்பத்திரண்டு வயதுக்கு முதிர்ந்த தோற்றம் வந்து விட்டது. மனவேதனையும் அலைந்த அலைச்சலும் அவனை அடியோடு உருக்குலைத்து விட்டது. ஊர்ப் பக்கம் போய் என்ன செய்

யப் போகிறேன் என்ற திகைப்பு உள்ளே எழுந்தாலும் தன் நிலத்தால் சீவிப்பதுதான் நிம்மதியான சீவியமாகப்பட்டது.

எத்தனையோ பேர் வெளிநாடுகளுக்குப் போய் வசதியாக வாழும் போது தனக்கு மட்டும் அந்த வசதிகள் மறுக்கப்பட்டது ஏன் என்று தெரியவில்லை. அவனது முயற்சிகள் எல்லாம் தோல்வியில்தான் முடிந்திருக்கிறது.

சின்ன வயதிலிருந்தே படிப்பு பிடிபடவில்லை. படிப்பில் ஆர்வமும் இல்லை' வயல் வேலை உள்ள நாட்களில் தகப்பனுடன் வயலுக்குப் போய் வருவான். ஆனால் அதையும் ஈடுபாட்டுடன் செய்ய முடியவில்லை.

சின்ன வயதிலிருந்து பழகிய சிநேகிதன் சிவபாலன் அவனும் வயல் செய்து கொண்டிருந்தான்.

நித்தியானந்தன் வெளிநாடு செல்லும் ஆசையில் கொழும்புக்கும் பரந்தனுக்கும் இடையே அலைந்து கொண்டிருந்த நேரத்தில் சிவபாலன் தோட்டம் செய்ய என்று விசுவமடுவுக்குப் போனான்.

காணி, வயல் விற்று அவன் ஏஜென்சிக்கு காசு கட்டி அலைந்து கொண்டிருந்த போது சிவபாலன் திருவையாறில் தோட்டக் காணி, வயற்காணி என்று நிலம் வாங்கினான்.

இன்றைக்கு சிவபாலன் நல்ல வசதியாக வாழ்கிறான் என்று வேறு ஆட்களின் மூலம் அவன் கேள்விப்பட்டிருந்தான். அவனுக்கு மண் வஞ்சனையில்லாமல் விளைந்து கொடுக்கிறது போல் இருக்கிறது. ஆனாலும் இப்போது பொருளாதாரத்தடையால் உரம், எரிபொருள் இல்லாமல் பாதிக்கப்படுவானோ தெரியவில்லை.

சிவபாலனும் திருவையாறில் தங்கள் வீட்டிலிருந்து சற்று தூரத்தில் இருப்பதாகத்தான் தங்கை கடிதம் எழுதியிருந்தாள்.

சிவபாலனுக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் கூட இருப்பதாக தங்கை எழுதியிருந்தாள். இப்போது கழுத்தை நெரிக்கும் பொருளாதாரப் பிரச்சனைகளில் அவன் குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாமல் சிரமப்படுகிறானோ என்னவோ...

அவன் வந்த பஸ் கிளிநொச்சி பஸ் நிறுத்தத்தில் வந்து நின்றது.

நித்தியானந்தன் தனது பெட்டி சூட்கேசுடன் இறங்கினான். இறங்கி நின்று சுற்றும் முற்றும் பார்த்தான். இடிந்து போன கட்டிடங்களை எதிர்பார்த்து வந்தவனுக்கு நம்ப முடியாமல் இருந்தது. கட்டிடங்களும் கடைகளும் சுறுசுறுப்பான மக்களுமாய் நிலையம் கலகலப்பாக இருந்தது

ஒலிபெருக்கியில் தமிழோசை மாலை நேர ஒலிபரப்பில் விளம்பரங்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன.

திடீரென்று மிக அருகில் மோட்டார் சைக்கிளின் இரைச்சல் கேட்கவும் திரும்பிப் பார்த்தான்.

அவன் சிறிதும் எதிர்பாராத விதமாக சிவபாலன் அதிலிருந்து இறங்கினான்.

அவனை வியப்புடன் பார்த்து.

''டேய் நித்தி! நீ எங்க.. இங்க வந்து நிக்கிறாய்'' ''நீ எப்பிடி இருக்கிறாய் சிவா?''

''நாங்கள் நல்லாய் இருக்கிறம் உன்ரவிஷயம் எப்பிடி? உன்னை மொஸ்கோவில நிற்குது எண்டு சொல்லிச்சினமே''

அங்கொண்டும் சரி வரேலை திரும்பி வந்திட்டன். வாவன் எங்கட வீட்ட முதல்ல போவம், நான் முற்பகுதியில இருக்கிறன். பிறகு உன்னை திருவை

பொ... நூலகம் ...
கண்டிக்குளி கிளை நூலகம்.

யாறில உங்கட வீட்ட கொண்டு போய் விட்டு விடுறன்.''

அவனது பெட்டி பைகளை மோட்டார் சைக்கிளில் பின்னால் வைத்து மள மள வென்று சிவபாலன் கட்டினான்.

''அப்பிடியே உருட்டிக் கொண்டு வா...... அதில மண்ணெண்ணெய் அடிச்சுக் கொண்டு போவம்'' என்ற படி நடந்தான்.

மண்ணெண்ணெய் அடித்தபின் நித்தியானந்தன் பின்னால் அமர மோட்டார் சைக்கிள் புறப்பட்டது, ''கொஞ்ச காலத்துக்குமுந்தி மண்ணெண்ணையில வாகனம் ஓடும் எண்டு சொன்னால் ஆர் நம்பியிருப்பினம் சொல்லு, இப்ப இந்தப் பொருளாதாரத் தடையால எவ்வளவு மாற்றம். தமிழனை எந்த விதத்தாலையும் விழுத்தஏலாது. ஒவ்வொண்டுக்கும் மாற்று நடவடிக்கை எடுத்துப் போடுவம். இப்ப லொறி, பஸ் கூட மண்ணெண்ணையில தான் ஓடுது. வெறும் காத்தை ஊதியே ஸ்ராட் பண்ணிறம். நம்ப ஏலுமே.''

சிவபாலன் சொல்லிக் கொண்டு வருவதை அவன் வியப்புடன் கேட்டுக் கொண்டு வந்தான்.

சிவபாலனின் வீடு மாமர தென்னை மரச் சோலையின் நடுவேயிருந்தது. அவனது வசதியும் செழிப்பும் வெளிப்படையாகத் தெரிந்தது.

காணி முழுக்க பயிர் செய்திருக்கிறான். அரிசியிலிருந்து தேங்காய் மரக்கறி வரைக்கும் எல்லாம் உற்பத்தி செய்கிறான். உள்ள வா...... என்று கூட்டிப் போனான்.

சிவபாலனின் மனைவி உழுத்தம்மா உருண்டையும் தேனீரும் கொண்டு வந்து கொடுத்தாள்.

குழந்தைகள் இரண்டும் சிவபாலனுடன் வந்து ஒட்டி நின்றன. தன் பையை எடுத்து அதற்குள் இருந்த பிஸ்கட் பெட்டி ஒன்றை எடுத்து குழந்தைகளிடம் நித்தியானந்தன் கொடுத்தான்.

சிவபாலன் தோட்டத்தைச் சுற்றிக் காட்டினான். எல்லாவிதமான மரக்கறி வகைகளும் செழித்துவளர்ந்திருந்தன.

''மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டில் எப்பிடி இவ்வளவு பயிர் வைச்சிருக்கிறாய்...... ''

''இப்ப வாட்டப்பம் மால இறைக்கிறத விட்டிட்டம்.

அப்ப......?

இப்ப சூத்திரக்கிணறால தான் இறைக்கிறனான். அதென்ன... சிவபாலன் அவனைக் கூட்டிப் போய் கிணறு காட்டினான்.

இரண்டு மாடுகள் சுற்றி இழுக்க புல் சக்கரத்திலிருந்து வரிசையாய் வாளிகளில் நீர் கொட்டுவதை அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

'' பன்னிரண்டாயிரம் செலவழிச்சு இதைச் செய்திட்டால் பிறகு செலவில்லை. எவளவு லாபம் சொல்லு. எவளவு பயிரும் வைக்கலாம். ஒவ்வொண்டையும் அரசாங்கம் தடை செய்ய சனம் மாற்று வழி கண்டு பிடிச்சிடும். கிளாலியில படகு ஓடாத நாளில எவளவு யாழ்ப்பாணச் சனம் வந்து கிளிநொச்சியில நிக்குதுகள் அவையின்ர சாப்பாட்டுத் தேவையளை கிளிநொச்சி எண்டபடியால தாக்குப் பிடிக்குது. சிவபாலனின் மோட்டார் சைக்கிளில் தனது வீட்டுக்குப் புறப்பட்டான். மனம் பாரமின்றி உற்சாகமாக இருந்தது. மண்ணை நம்பிப் பாடுபடுகிறவனை மண் ஏமாத்தாது''......

சிவபாலனின் வார்த்தைகளைக் கேட்ட நித்தியானந்தனுக்கு மனம் பாரமாய் கனத்தது.

எவ்வளவு காலத்தை விரயமாக்கி விட்டோம் என்ற நினைப்பு தாங்க முடியாத கவலையை தந்தது. அந்த சோலையையும் செழிப்பையும் பார்க்கும் போது தான் போய் திருவையாறில் இனி என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்து விட்டது. □□

சென்ற இதழ் தொடர்ச்சி

**விவசாய இரசாயனங்களின் வகை**

பலவகை இரசாயனங்கள் பாவனையில் உள்ள போதும், பல வகைகள் உள்ள போதும், பெருமளவில் பாவிக்கப்படும் நாசினிகளை மூன்று முக்கிய பிரிவாக கொள்ளலாம்.

1) களை நாசினிகள்

2) பங்கசு நாசினிகள்

3) பூச்சி நாசினிகள்

இவற்றை விட வேறு பல்வேறு பெயர்களிலும், இருந்த போதும் முக்கிய மூன்று வகையாக இவற்றை குறிப்பிடலாம். களைகளை கட்டுப்படுத்த களை நாசினிகளும், பங்கஸ் நோய்களை கட்டுப்படுத்த பங்கஸ் நாசினிகளும் பூச்சிகளை கட்டுப்படுத்த பூச்சி நாசினிகளும் பாவிக்கப்படுகின்றன.

## பாதுகாப்பு நடவடிக்கைகள்

அ. விசிற முன்......

1. பயிரில் ஏற்பட்டுள்ள, உண்மையான தாக்கத்தையும், அதற்கேற்ற நாசினியையும் அறிந்து கொள்ளுதல்.

2. மிக அத்தியாவசியம் என கருதும் போது, நாசினியை விசிற தீர்மானித்தல்.

3. சரியான கட்டுப்பாட்டு முறைகளை அறிந்து கொள்ளுதல்.

4. ஏற்பட்டுள்ள, பிரச்சனைக்கு சிபார்சு செய்யப்பட்ட நாசினியை பாவித்தல்.

5. அறிவுறுத்தல்களை செம்மையாக வாசித்தல்.

6. சரியான பாதுகாப்பு முறைகள், உகந்த உடைகள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

7. பாவிக்கப்படும் தெளிகருவி, இயங்கக் கூடிய நிலையில், ஒழுக்கு எதுவுமின்றி உள்ளதா என நீர் விட்டு விசிறி பரிசோதித்தல்.

8. இரசாயனங்களை உலர்ந்த பூட்டப்பட்ட களஞ்சியத்தில் பேணல். அல்லது தேவைக்கு மட்டும் அளவான நாசினியை வாங்குதல்.

9. சுற்றத்தவர்களுக்கு, நாசினி விசிறப் போவதை தெரியப்படுத்துதல்.

10. வேறு பாத்திரங்களில் நாசினியை மாற்றுவதை தவிர்த்தல்.

11. அளப்பதற்கும், கலப்பதற்கும் பொருத்தமான பாத்திரங்களை வைத்திருத்தல்.

12. சவர்க்காரம், சுத்தமான நீர், மாற்றுடைகளை ஆயத்தமாக வைத்திருத்தல்.

# விவசாய இரசாயனங்களும் விளைவுகளும்

செ. விக்கினேஸ்வரன்

ஆதாரம்

### ஆ. விசிறும் போது......

1. உகந்தபாதுகாப்பு உடைகளை அணிந்து கொள்க. கையுறைகளை அணிதல், வாயையும் மூக்கையும் மூடி கட்டுதல் நல்லது.

2. நெருக்கமாக நின்று கையாழுவதை தவிர்த்தல்.

3. கலக்கும் போது சிறுவர்களையும், அநாவசியமாக மற்றவர்களையும் கூட நிற்க விடக்கூடாது.

4. ஆலோசனைகளை மீண்டும் வாசித்தல்.

5. வாய், கண் போன்றவற்றில் படாமல், அவதானமாக கையாழுதல்.

6. திரவமாயின் தெறிக்காமலும், தூளாயின் பறக்காமலும் கவனமாக கையாழுதல்.

7. விசிறும் போது, உண்ணுதல், குடித்தல், புகைத்தல், சப்புதல் ஆகியவற்றை தவிர்த்தல்.

8. எப்பொழுதும் மேல்காற்று பக்கம் நின்று கலக்கவும்.

9. சரியான அளவில் நாசினி கலக்கப்படுவதை உறுதி செய்து கொள்க. எக்காரணம் கொண்டும் கையால் கலக்க வேண்டாம். ஒரு தடியினால் கலக்கலாம்.

10. நாசினிகளை மணந்து பார்ப்பதை தவிர்க்கவும்.

11. கீழ்காற்று தொங்கலில் இருந்து விசிறுக. மேல்காற்று பக்கமாக தொடர, விசிறுபவர், விசிறாதபகுதிகளூடாக விசிறக் கூடியதாக இருக்கும்.

12. வாயினால், விசிறும் அணுவாக்கியை கழற்றுவதையோ திருப்புவதையோ தவிர்க்கவும்.

13. வயலில் இல்லாத நேரத்தில் நாசினியை அங்கு வைக்க வேண்டாம்.

### விசிறி முடிந்ததும்......

1. பாவிக்காத நாசினியை குழந்தைகளுக்கு எட்டாத, உணவுப்பொருட்களுக்கு அருகே கிட்ட இல்லாமல், வைத்து பூட்டவும்.

2. வெற்றுக் கொள்கலன்களை உடனடியாக கண்டிப்பாக அழித்து விடுக.

3. தெளிகருவியை கழுவி பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

4. பாதுகாப்பு உடைகளை கழற்றி துப்பரவு செய்க.

5. உடம்பை நன்கு கழுவி மாற்றுடைகளை அணிக.

6. ஒரு பதிவேட்டில் நாசினி விசிறியதை பதிவு செய்து கொள்க.

7. விசிறப்பட்ட பகுதிக்குள் எவரையும் நச்சுத்தன்மை இருக்கக் கூடிய காலம் வரை செல்ல அனுமதிக்க வேண்டாம்.

விசிறும் போது, நஞ்சூட்டப்பட்டால், பின்வரும் அறிகுறிகள் ஒன்றோ பலவோ தென்படக்கூடும். தலையிடி, தலைசுற்று, மயக்கம், வாந்தி எடுத்தல், வயிற்றை பிரட்டுதல் ஆகிய குறிகள் காணப்படக்கூடும். உடனடியாக விசிறுவதை நிறுத்தி, உடைகளை களைந்து, உடம்பை நன்கு கழுவி, நிழலில் படுக்க வைத்து, சுத்தமான காற்று பட செய்ய வேண்டும். கறி உப்பை வெந்நீரில் கரைத்து கொடுக்கலாம். வாந்தி எடுக்க

செய்ய வேண்டும். உடனடியாக பாதிக்கப் பட்டவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். கொண்டு போகும் போது, விசிறிய நாசினி, அதன் விபரம் கொண்ட துண்டுப் பிரசுரம் அவற்றையும் கொண்டு போக வேண்டும்.

அனேக நஞ்சுகளுக்கு மாற்று மருந்து, அன்ரபிள் சல்பேற் அல்லது அன்ரிடொட் பாபம் நரம்பூடாக, ஊசிமூலம் கொடுக்கப் பட வேண்டும்.

அண்மைக் காலத்தில் விவசாய இரசாயனங்களை அருந்தி தற்கொலை செய்பவர்களின் தொகை கணிசமான அளவில் அதிகரித்து வருவதாக சொல்லப்படுகின்றது. இதற்கு உளவியல் நிபுணர்கள் கூறும் கருத்து, விவசாய இரசாயனங்கள் சரியாக கையாளப் படாமை தான் என குறிப்பிடுகின்றனர். ஒருவர் விரக்தி நிலையில், நாசினி அருந்த எண்ணும் போது, அந்த மனநிலை 1-2 நிமிடம் மட்டும் தான் இருக்கும் என சொல்கின்றார்கள். அந்த நேரத்தில் அது கிடைக்கா விட்டால், அவர்களின் மன நிலை மாறி விடுமாம். எந்த வகையிலும், அவசரப்பட்டு எவரும் எடுக்க முடியாதபடி, காஇரசாயனங்களை பூட்டி வைத்தல் அத்தியாவசியமானதாகும்.

இறுதியாக, முன்பு குறிப்பிட்ட முறைகளை கையாண்டால், நாசினி விசிறும் தேவையை குறைக்கலாம். அல்லது மிகவும் நச்சுதன்மை குறைவான நாசினிகளை பாவிக்கலாம். இந்த வகையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையே எமக்கு, பயிர்களை பாதுகாக்க ஒரு பொருத்தமான முறையாக அமைய முடியும். □□

## தன்னிறைவைத் தாண்டிய உப்பு உற்பத்தி

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழீழத்தின் உப்பு உற்பத்தித் தொழில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளால் புது வளர்ச்சி பெற்றதோடு சுயதேவையில் தன்னிறைவைத் தாண்டி அடுத்த ஆண்டுக்கான தேவையில் ஒரு பகுதியை பூர்த்தி செய்யக்கூடிய கையிருப்பையும் கொண்டுள்ளது.

போரின் ஆரம்ப கட்டத்தில் கிலோ 30/- வரையில் விலை போன உப்பு உள்ளூர் உற்பத்தியினால் தற்போது கிலோ 10/- வாக குறைந்துள்ளது. சில விற்பனை நிலையங்களில் ஒன்பது ரூபாவுக்கும் விற்கப்படுகின்றது.

குறைந்த விலையில் சில்லறை விற்பனை செய்யக்கூடியதாக உப்பின் மொத்த விலை விநியோகம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள போதிலும் பல்வேறு இடங்களில் பலவிதமான விலைகளில் உப்பு விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் உற்பத்தியான உப்பு தாராளமாகக் கையிருப்பில் இருப்பதால் தென்னிலங்கையில் இருந்து உப்பைக் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. கொள்ளை இலாபம் சம்பாதிப்பவர்கள் பல்வேறு பொய்க் காரணங்களைக் கூறி அதிக விலைக்கு உப்பு விற்பனை செய்கிறார்கள். உப்பை அதிக விலைக்கு விற்பதற்கு எந்தவித நியாயமும் கிடையாது.

பாவனையாளர்களான பொது மக்கள் இவ்விடயத்தில் விழிப்பாக இருப்பதன் மூலம் கொள்ளை இலாபம் சம்பாதிப்பவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுடன் நன்மையும் பெறலாம்.

தமிழீழ மக்களுக்கு ஏற்பட்டுள்ள சக்தித்தட்டுப்பாடு என்னும் பெரும் சுமையை உடைத்தெறிவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் மிகவும் முனைப்புடன் தொழிற்பட்டு, மிகக்கடினமான தேடலின் பயனாக நவீன மயமாக்கப்பட்ட ஆக்கிவாயுப் பிறப்பாக்கியை வடிவமைத்துள்ளனர்.

# ஆக்கிவாயுவினால் ஆக்கிரமிப்பை உடைத்தெறிவோம்

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து நாற்பதாம் ஆண்டுகளின் முற்பகுதி. போர் மேகங்கள் பாரெங்கும் பரவியிருந்த காலம். நேசநாட்டுப் படைகளுக்கும், அச்சு நாட்டுப் படைகளுக்கும் கடும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதாவது இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இக்காலத்தில் உலகம் முழுவதிலும் கடல் மார்க்கப் பாதைகள் மூடப்பட்டிருந்தன. இதனால் ஐரோப்பிய நாடுகளில் எரி பொருட்கள், உணவு வகைகள், மருந்து வகைகள் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு நிலவியது. உயிர்ச்சுவட்டு எரிபொருட்களை மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு கடல் மார்க்கப்போக்கு வரத்து இல்லாமையினால், ஐரோப்பிய நாடுகளில் எரிபொருட்களுக்கு அதிகளவு பற்றாக்குறை ஏற்பட்டது. பெற்றோலிய எரிபொருட்களின் விலையும் மிக உயர்வாக இருந்தது. இக்கால கட்டத்தில் ஐரோப்பிய நாட்டவர்களின் கடினமான உழைப்பின் விளைவாக பெற்றோலிய எரி பொருட்களுக்குப் பதிலாக மாற்று எரி பொருள் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு, பயன் படுத்தப்பட்டு, பெற்றோலிய எரிபொருள் இல்லையே என்ற நிலையும் அற்றுப்போனது. இவ்வாயு எரிபொருளைப் பயன்படுத்தி ஐரோப்பிய நாடுகளில் வாகனங்கள், புகையிரதங்கள், மீன் பிடிப்படகுகள், மரம் அரியும் ஆலைகள், மா அரைக்கும் ஆலைகள் ஆகியன இயக்கப்பட்டன. இவ் எரிபொருள்

தான் ஆக்கிவாயு ஆகும். ஆக்கிவாயுவின் அறிமுகத்திற்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் தரைமார்க்கப் போக்குவரத்திற்கு இருந்த தடை நீங்கியது. உணவுப்பொருட்கள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றின் விநியோகம் சீரடைந்தது. மக்களின் தொல்லைகள் நீங்கின.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஐரோப்பிய நாடுகளில் நிலவிய சூழ்நிலையே இன்று நமது பிரதேசத்திலும் நிலவி வருகின்றது. எமது பிரதேசத்திற்கான கடல் மார்க்கப்பாதைகள், தரைமார்க்கப் பாதைகள் யாவும் எதிரியினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மண்ணெண்ணெய் தவிர ஏனைய எரிபொருட்களை நமது பிரதேசத்திற்கு எடுத்து வருவதற்கு சிங்கள அரசு தடை விதித்துள்ளது. எமது பிரதேசத்திற்கு அனுப்பப்படும் மண்ணெண்ணெய் மக்களின் தேவையை அரைப்பங்கு கூடப் பூர்த்தி செய்ய போதாது உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக எமது பிரதேசத்திற்கான மின் விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் எமது பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு இப்போது எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எமது சக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய நாம் சிங்கள அரசில் தங்கி நிற்காது நம்மை நாமே தாங்கி நிற்க வேண்டும் என்ற உறுதியான இலட்சியத்தோடு, தமிழீழ மக்களுக்கு ஏற்பட்டுள்ள சக்தித் தட்டுப்பாடு என்னும் பெரும் சுமையை உடைத்தெறிவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் மிகவும் முனைப்புடன் தொழிற்பட்டு, மிகக் கடினமான தேடலின் பயனாக நவீன மயமாக்கப்பட்ட ஆக்கிவாயுப் பிறப்பாக்கியை வடிவமைத்துள்ளனர். ஆக்கிவாயுப் பிறப்பாக்கி என்பது திண்ம நிலையில் உள்ள எரிபொருளை இலகுவில் தீப்பற்றக்கூடிய வாயு எரிபொருளாக மாற்றும் உத்தியே ஆகும். வாயு எரிபொருளின் வெப்ப உற்பத்தி அளவு அல்லது கலோரிப் பெறுமானம் திண்ம எரிபொருளின் வெப்ப உற்பத்தி அளவைவிட உயர்வானதாகையால் வாயு எரிபொருளிலிருந்து அதிக அளவு சக்தியை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆக்கிவாயு என்றால் என்ன? இதன் கூறுகள் எவை? இதனை எவ்வாறு உற்பத்தி செய்யலாம்? இதன் பயன்கள் எவை? என்பனவற்றை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆக்கிவாயுவை உற்பத்தி செய்வதற்கு இரண்டு மூலப்பொருட்கள் பயன்படுகின்றன.

1) சிரட்டைக் கரி / மரக்கரி / நிலக்கரி / எரியாத சிரட்டை

2) வளி.

திண்ம எரிபொருளை அதாவது சிரட்டைக் கரித் துண்டுகளைப் பொருத்தமான பருமனில் உடைத்து ஆக்கிவாயுப் பிறப்பாக்கியில் நிரப்பி அதனூடாகக் கட்டுப்படுத்தப்பட்ட மெல்லிய வளிப்படையை உட்செலுத்திய வண்ணம் பிறப்பாக்கியில் நிரப்பப்பட்டுள்ள சிரட்டைக்கரி எரியூட்டப்படும். இவ் அமைப்பில் உள்ள எரியூட்டும் வாயின் வெப்பநிலை $1000° C$க்கு மேல் பேணப்படுகின்றது. இந் நிபந்தனையில் நடைபெறுகின்ற இரசாயனத் தாக்கத்தின் விளைவாக ஆக்கிவாயு பெறப்படுகின்றது. ஆக்கிவாயுவின் கூறுகள் இவை தான்.

| | |
|---|---|
| 1) நைதரசன் ($N_2$) | = 45% — 54% |
| 2) காபனோரொட்சைட்டு ($CO$) | = 18% — 25% |
| 3) ஐதரசன் ($H_2$) | = 13% — 15% |
| 4) மெதேன் ($CH_4$) | = 3% — 5% |
| 5) நீராவி ($H_2O$) | = 1% — 10% |
| பாரமான காபன் துணிக்கைகள் | 0.02% — 0.04% |

ஆக்கிவாயுப் பிறப்பாக்கியின் எரியும் அறையுள் நடைபெறுகின்ற தாக்கங்கள் பின்வருமாறு:-

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.

ஆதாரம்

1) சூடாக்கப்பட்ட நிலையில் உள்ள காபனுக்கு மேலாக வளி செலுத்தப்படும் போது நைதரசனும், காபனீரொட்சைட்டும் கொண்ட கலவை பெறப்படுகின்றது. இத்தாக்கம் புறவெப்பத் தாக்கம் ஆகும்.

$C + O_2 + 3.79 N_2 = 3.79 N_2 + CO_2$;
$H = - 395400\ KJ/Kg$ காபன் அணு

2) தாக்கம் 1 இல் உண்டான காபனீரொட்சைட்டு சூடாக்கப்பட்ட நிலையில் உள்ள காபனுடன் தாக்கமுற்று நைதரசனையும் காபனோரொட்சைட்டையும் கொண்ட கலவை பெறப்படும். இத்தாக்கம் அகவெப்பத் தாக்கமாகும்.

$C + CO_2 + 3.79\ N_2 = 3.79\ N_2 + 2CO$;
$H = + 172{,}000\ KJ/Kg$ காபன் அணு

3) சூடாக்கப்பட்ட நிலையில் உள்ள காபன் கட்டுப்படுத்தப்பட்டுள்ள அளவு ஒட்சிசனுடன் தாக்கமடைவதால் காபனோரொட்சைட்டும், நைதரசனும் கொண்ட கலவை பெறப்படும். இத்தாக்கம் புகவெப்பத் தாக்கம் ஆகும்.

$2\ C + O_2 + 379\ N_2 = 2CO$;
$H = + 223300\ KJ/Kg$ காபன் அணு

4) சூடாக்கப்பட்ட நிலையில் உள்ள காபன் வளி, திண்ம எரிபொருளில் உள்ள நீராவியுடன் தாக்கமடைந்து காபனோரொட்சைட்டும், ஐதரசனும் கொண்ட கலவை பெறப்படும். இத்தாக்கம் அறவெப்பத் தாக்கம் ஆகும். காபனோரொட்சைட்டும், ஐதரசனும் கொண்ட கலவை நீர்வாயு எனப்படும்.

$C + H_2O = CO + H_2$;
$H = - 130000\ KJ/Kg$ காபன் அணு

5) சூடாக்கப்பட்ட நிலையில் உள்ள காபன் (தாக்கம் 4) இல் உண்டான ஐதரசனுடன் தாக்கமுற்று மெதேன் வாயு உண்டாகின்றது. இத்தாக்கம் அகவெப்பத் தாக்கமாகும்.

$C + 2H_2\ 500.c\ CH_4$;
$H = + 75000\ KJ/Kg$ மூல் காபன்

ஆக்கிவாயுப் பிறப்பாக்கியில் இருந்து வெளியேறும் ஆக்கிவாயு பெட்டியில் குளிரூட்டப்பட்டு அதிலுள்ள மாசுக்கள் வடிகட்டியினுள் அகற்றப்பட்டு வாயு சுத்திகரிக்கப்படுகின்றது. வடிகட்டியினுள் சாம்பல், காபன் துணிக்கைகள், தார் ஆகியவை அகற்றப்படுகின்றன. சுத்திகரிக்கப்பட்ட, குளிரூட்டப்பட்ட ஆக்கிவாயுவை ஒழுங்குபடுத்திய இயந்திரத்திற்கு வழங்கும் போது இயந்திரம் ஆக்கிவாயுவினால் இயக்கப்படும். இயந்திரத்தை இயக்க ஆரம்பிப்பதற்கு சிறிதளவு பெற்றோல் இயந்திரத்திற்கு ஊட்டப்படல் வேண்டும். மேலே குறிப்பிட்ட தொழிற்பாடுகளைப் பாய்ச்சல் படம் மூலம் பின்வருமாறு காட்டலாம்.

பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றில் இயங்கிய உள்தகன இயந்திரங்களாயின் ஆக்கிவாயுவை மட்டும் பயன்படுத்தி இயக்கலாம். டீசல் இயந்திரங்களாயின் 90% ஆக்கிவாயுவும் 10% டீசலும் கலந்தே இயக்கலாம். டீசல் இயந்திரங்களில் தீப்பொறி அமைப்பு இல்லாமையினாலேயே தனித்து ஆக்கிவாயுவைக் கொண்டு இயந்திரத்தை இயக்க முடியாதுள்ளது.

ஆக்கிவாயுவில் அடங்கியுள்ள சக்தியைப் பயன்படுத்தி இயங்கும் இயந்திரம் இரண்டு கருமங்களை ஆற்றுகிறது.

1) தான் இயங்குகின்றது அதாவது இயந்திரம் இயங்குகின்றது.

2) ஆக்கிவாயுப் பிறப்பாக்கியையும் இயக்குகின்றது.

ஆக்கிவாயுப் பிறப்பாக்கியினுள் ஆக்கிவாயு உற்பத்தியாக்கப்படும் போது ஆரம்பத்தில் பிறப்பாக்கியினுள் வளி செலுத்தப்படும். ஆக்கிவாயுவினால் இயந்திரம் தொழிற்பட

[stamp]

ஆரம்பித்ததும் இயந்திரம் வளியை உள் நோக்கி இழுப்பதால் திண்ம எரிபொருள் எரியத்தேவையான வளி தொடர்ந்து கிடைக்கின்றது.

ஆக்கிவாயுவின் கலோரிப் பெறுமானம் அல்லது வெப்ப உற்பத்தி அளவானது பெற்றோலின் கலோரிப் பெறுமானத்தை விட குறைவானது. ஒரு லீற்றர் பெற்றோலில் அடங்கியுள்ள சக்தி 2.2 கிலோ சிரட்டைக் கரியில் அடங்கியுள்ள சக்திக்கும் ஒரு லீற்றர் டீசலில் அடங்கியுள்ள சக்தி 3.3 கிலோ சிரட்டைக்கரியில் அடங்கியுள்ள சக்திக்கும் சமனாகும். ஆக்கிவாயுப் பிறப்பாக்கித் தொகுதியில் நடைபெறுகின்ற சக்தி மாற்றம் வருமாறு:-

இரசாயனச் சக்தி → வெப்பச் சக்தி → பொறிமுறைச்சக்தி

பொறிமுறைச் சக்தியைப் பயன்படுத்தி மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் ஆகியவற்றில் இயங்கும் சகல வகையான இயந்திரங்களையும் இயக்க முடியும். விவசாயத் துறையில் நீரிறைக்கும் இயந்திரம், உழவு இயந்திரங்கள் ஆகியனவற்றை இயக்கலாம், மக்களின் போக்குவரத்துச் சாதனங்களான கார், பஸ் போன்றவற்றை ஓடச் செய்யலாம். பொருட்களை இடமாற்றம் செய்யும் லொறிகள், வான்கள் ஆகியவற்றை இயக்கலாம். மீன் பிடிப்படகுகளை இயக்கலாம். சமையல் தேவைக்குப் பயன்படுத்தலாம். ஒளியேற்றலுக்கு உபயோகிக்கலாம். யுத்த தேவைகளுக்குப் பயன்படும் வாகனங்களையும் இயக்கலாம். மின் பிறப்பாக்கியினை இயக்கி மின்னை உற்பத்தி செய்து மின் சாதனங்கள் எல்லாவற்றையும் இயங்கச் செய்யலாம். ஆக்கிவாயுவைப் பயன்படுத்துவதில் உள்ள அனுகூலங்கள் வருமாறு:-

1) குறைந்த செலவில் தேவையான சக்தியைப் பெற்றுக் கொள்ளலாம்.

2) பெற்றோலிய எரிபொருட்களுக்குச் செலவிடும் பணத்தை எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தலாம்.

3) மூலப்பொருட்களை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆக்கிவாயுவின் ஒரு கூறான காபனோரொட்சைட்டு கன அளவுப்படி 0.05% செறிவுடையதாக இருப்பின் மனிதருக்குத் தீங்கு ஏற்படலாம். பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் ஆகிய எரிபொருட்களைப் பயன்படுத்தி இயங்கும் வாகனங்களில் புகைபோக்கிகள் ஊடாக வெளியேறும் புகையில் 6% - 7% காபனோரொட்சைட்டு உண்டு. இது வளியுடன் கலக்கும் போது இதன் செறிவு 0.05% கீழ் குறைவதால் தீங்கு எதையும் ஏற்படுத்துவதில்லை, ஏற்படுத்தியதும் இல்லை. ஆக்கிவாயுவைப் பிறப்பாக்கியில் உற்பத்தியாக்கப்படும் ஆக்கிவாயுவில் உள்ள காபனோரொட்சைட்டு அணு அளவு எனினும் கசிந்து வளிமண்டலத்தை அடைவதற்கு சாத்தியம் இல்லை. இதற்கான காரணங்கள் வருமாறு.

1) வளியை இயந்திரம் இழுப்பதால் பிறப்பாக்கித் தொகுதியில் அமுக்கம் வளிமண்டல அமுக்கத்தை விடக் குறைவாக இருத்தல்.

2) ஆக்கிவாயு இயந்திரத்தினுள் பூரண தகனமடைதல் - இதனால் இயந்திரத்தில் இருந்து புகைபோக்கியின் ஊடாக வெளியேறும் புகையிலும் காபனோரொட்சைட்டு இருக்கமாட்டாது - ஆக்கிவாயுவின் பூரண தகனத்தின் போது நடைபெறும் தாக்கங்கள் வருமாறு:-

$$2CO + O_2 = 2CO_2$$
$$2H_2 + O_1 = 2H_2O$$
$$CH_4 + 2O_2 = CO_2 + 2H_2O$$

எனவே ஆக்கிவாயுவை இயந்திரங்களை இயக்கப் பயன்படுத்துவதால் உயிரினங்களிற்கு எதுவித தீங்கும் ஏற்பட மாட்டாது. ஆக்கிவாயுவைப் பயன்படுத்தி நமது சக்தி தேவைகளை நாம் பூர்த்தி செய்வது திட்டமிட்ட பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்தியுள்ள சிங்கள அரசுக்கு ஒரு

தலையிடியாகவும், சவாலாகவும் அமையும் என்பது திண்ணம்.

தமிழினத்தைத் தனது நாசகார ஆயுதங்களினால் அடக்கும் முயற்சியில் தோற்றுப்போன சிங்கள அரசின் இறுதி ஆயுதம் தான் திட்டமிட்ட பொருளாதாரத் தடை. தனி மனிதன் ஒருவனுக்கு நெருக்கடி ஏற்படும் போதுதான், அவன் தனது ஆற்றலை வெளிக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. தமிழீழதேசத்தவருக்கு இப்போது நெருக்கடி நிறைந்த காலகட்டம். எமது இயல்பான உந்துதல் எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான புதிய கண்டு பிடிப்புகளாக மலரும் போது எதிரியின் மூகத்தில் கரிபூசப்படுகின்றது. அவனது இறுதி ஆயுதமும் தோற்றுப் போகின்றது. இந்தப் புதிய வகையான போராட்ட வளர்ச்சியை முடக்குவதற்கு எதிரி கையாளும் புதிய உத்திதான் இடையிடையே அவன் காட்டும் போலிப் பொருளாதாரத் தடைத் தளர்வு. இது நமது பலத்தைப் பலவீனமாக்குவதற்கு எதிரி கையாளும் தந்திரமாகும். தடை செய்யப்பட்ட சக்திவளப் பொருட்களை தமிழீழ எல்லை இராணுவ முகாம்கள் இடையிடையே தமிழீழத்தினுள் எடுத்து வர அனுமதிப்பதால், அவற்றை நாம் இலகுவில் பயன்படுத்தி எமது சக்தித் தேவையைப் பூர்த்திசெய்வதால், நாம் சுதேச சக்தி வளங்களைத் தொடர்ந்து விருத்தி செய்வதை விடுத்து அந்நியனின் கரங்களை மீண்டும் எதிர் பார்க்கத் தொடங்கி விடுகின்றோம். உண்மையிலேயே சிங்கள அரசின் நோக்கம் எமது மக்களின் கஷ்டங்களை தளர்த்த வேண்டும் என்பதல்ல. மாறாக எமது தேவை கருதிய முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவதே அவனது பிரதான நோக்கமாகும். சிங்கள அரசின் போலி இரக்கத்துக்கு நாம் மசியும் போதுதான் அவனது சதி பலிக்கின்றது. எமது முயற்சியும் மழுங்கடிக்கப்படுகின்றது. நாம் இப்பலவீனத்தை வென்றோமானால் எதிர்காலத்தில் மலரப்போகின்ற தமிழர் தாயகத்தில் சீனர்கள் உயிர்வாயு கொண்டு செய்யும் சாதனைகள் போல் பன்மடங்கு சாதனைகளை ஆக்கிவாயு கொண்டு புரியலாம். இதனை நிர்ணயிக்க வேண்டியவர்கள் தமிழீழ மக்களாகிய நாங்களே.

மொத்தத்தில் தமிழீழத்தில் ஆக்கிவாயுவின் அறிமுகம் தமிழீழ மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இதனைப் பயன்படுத்தித் தமிழீழ மக்கள் சிங்கள அரசின் ஆக்கிரமிப்பை உடைத்தெறிய திடசங்கற்பம் பூண்டுள்ளனர். எனவே ஆக்கிவாயுவின் அறிமுகத்தில் காரணகர்த்தாக்கள் எல்லோரும் மதிப்புக்கும் பாராட்டுக்கும் உரியவர் □□

---

## தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் வேண்டுகோள்

தமிழீழத்தில் சந்தைப்படுத்தப்படும் குளுக்கோஸ் அப்பச்சோடா, நிலம் போன்ற சில பொருட்கள் பிரபல்யமான வியாபாரக்குறிகளைக் கொண்ட போலியான பக்கற்றுக்களில் அடைத்தும் அல்லது போலிச்சுட்டுத் துண்டுகளைப் பாவித்தும் மக்களுக்கு விற்பனை செய்யப்படுவது எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான செயலென்பதை அறியத்தரும் அதேவேளையில் மக்களை ஏமாற்ற மேற்கொள்ளப்படும் இத்தகைய செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் வலியுறுத்துகின்றது. இவ் வேண்டுகோளை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும் அறியத்தருகின்றோம். இவ்வாறான செயல்கள் பற்றிய தகவல்களை எழுத்து மூலமோ அல்லது 230 இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அறியத்தரும்படி பொது மக்கள் வேண்டப்படுகின்றனர். □□

# எவர்க்கு மினி அடிமை செய்யோம்.

வான்பரப்பில் மிதக்கும் எம்செய்மதிகள் — தமிழீழ
மண்ணிற்காய் ''சென்றி''பார்க்கட்டும்.
தேனொத்த தமிழின் தீரத்தை வீரத்தை — அவை
வானிருந்தே பாரெங்கும் பரப்பட்டும்.

சூரியசக்தியும் கடலலையின் சக்தியும் — எம்மண்ணில்
பாரிய சக்தியாய் பயன்படட்டும்.
இருபத்திநாலு மணிநேரமும் தமிழீழமண்
சுறுசுறுப்பாக இயங்கட்டும்.

விண்ணோடும் கருமேகங்களை — எம்
வானூர்திகள் வழிமறிக்கட்டும் — அவை
இரசாயனக் கலவை தெளிக்கட்டும் — ஈழ
மண்மீது செயற்கை மழை பொழியட்டும்
வறள் நிலங்கள் அத்தனையும்
வளங் கொழிக்கட்டும்.

காலத்தின் வேகம் வென்றிடும்
விண் கலங்களால் எம்
பிரபஞ்ச அயல் கிரகங்கள்
அத்தனையும் அத்துப்படியாகட்டும்.



கவிதை

கணணிகள் எல்லாம் எம்மொழியில் இயங்கட்டும் — அவை
கணித்திடும் கணிப்புகள் எல்லாம் ஈழவர் வாழ்வு
இனித்திட, செழித்திட பயன்படட்டும்
மாவீரர் பெற்ற ஈழம் மகிழ்வாற்றில் குளிக்கட்டும்.

எம்மீது போர் தொடுக்க நினைக்கும் எவரும்
எம் போர்க்குணங் கண்டும் பெரும்பலம் அறிந்தும்
அவ் எண்ணமதை அக்கணமே கைவிடட்டும்.
இல்லையேல் .....
எல்லையில்லா வேகம்பெற்ற எம் ஏவுகணைகளால் — அவன்
தொல்லை கொடுக்கும் ஏவுதளங்கள்
அத்தனையும் அவ்விடத்திலேயே இல்லாது அழியட்டும்
லாவகமாய் இயங்கும் எம் ரோபோக்களால்
இல்லாதொழியட்டும் அவன் இயந்திர சாதனங்கள்.

வான்பரப்பில் வீணெண்ணம் கொண்டு
எம்மோடு மோத நினைப்போரை — புலி
விண்கலங்கள் விரட்டியடிக்கட்டும்
கண்ணிமைக்கும் கணப்பொழுதில்
கதிநிறைந்து கடிதென
ஊடுருவிப் பாயும் கதிர்களால் — அவை
விண்ணிருந்தே உருக்குலைந்து காணாமல் போகட்டும்
விண்ணோடு விண்ணாகக் கலக்கட்டும்.

எம் தனம் நோக்கும் அவன் கடற்கலங்கள்
செந்தமிழ் வீரர் செயற்திறத்தால்
வந்திட நினைக்குமுன்னே
வெடித்தழிந்து போகட்டும்
வெந்நீராகும் கடல் நீரிலவை மூழ்கட்டும்
வந்து வீணே மோத நினைக்கும் எவரும்
சொந்தமாய் மறுபிறப்பென்று ஒன்று இருந்தால்
வந்தெமைச் சந்திக்கட்டும்.
ஆம்......
இந்தப் பூமியிலெவர்க்குமினி அடிமை செய்யோம்.

□ தூயவன் □

---

யாழ் நகரில்
தனித்துவமான

குளிர்பான
நிலையம்

**லிங்கம் கூல்பார்**

52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

வெயில் காலத்தில்
ஓர் குறுகுறுப்பு
சுவை, தரம், சுகாதாரம்
நிறைந்த
**புத்தூக்கி தயாரிப்புகள்**

- மென் பானம்
- ஜாம்
- நெல்லிரசம்
- சொக்கா

யாழ்ப்பாண பனை தென்னை
வள அபிவிருத்திக் கூட்டுறவு
அபிவிருத்திக் கொத்தணி
75/1 பலாலி வீதி,
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

# யாழ் மாவட்டத்தில் விறகிற்கான கேள்வியும் அதன் நிரம்பலும்

வனஜா சின்னத்துரை

மக்கள் தற்போது பாவிக்கும் ஒரேயொரு எரிபொருளான இவ்விறகை மரத்திலிருந்தும், மரக்கழிவுகள், விவசாய மிச்சங்கள், பனை, தென்னந்தும்பு, மட்டை, வீட்டுத் தோட்டங்களிலிருந்து வெட்டி வீழ்த்தப்படும் மரங்களிலிருந்தும் பெறுகின்றனர். தற்போது விறகிற்கான முழு நிரம்பலும் இருக்கின்ற சிறு காட்டு மரங்களிலேயே தங்கியுள்ளது.

எரிபொருள் நுகர்வில் மின்சாரம், உயிரியல் வாயு, மண்ணெண்ணெய், காட்டு மரங்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. மாவட்டத்தில் 1990ம் ஆண்டுக்கு முன்பு மக்களில் பெரும்பாலானோர் தமது வீட்டுத் தேவைக்கான எரிபொருளாக விறகினை மட்டுமன்றி மின்சாரம், வாயு அடுப்புகள் என்பவற்றையும் பயன்படுத்தினர். விறகிற்கான மரங்கள் அயல் மாவட்டங்களான முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டது. இவற்றில் ஒப்பீட்டளவில் சொற்பமான பங்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தாலும் ஏனைய ஸ்தாபனங்களினாலும் மாவட்டத்தினுள் கொண்டு வரப்பட்டது. பெரும்பாலான மக்கள் தமது எரிபொருள் நுகர்வில் ஏறக்குறைய 94% மானோர் விறகினைப் பயன்படுத்தினார்கள்.

இப்பொழுது எழும் கேள்வி என்னவென்றால் கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்று வரும் யுத்தகாலச் சூழ் நிலைகளினால் மக்களின் வீட்டு உபயோகங்களிற்கும், மற்றும் உணவுத் தயாரிப்பு நிலையங்கள், பேக்கரி ஏனைய கைத்தொழில் உபயோகங்களிற்கும் எங்கிருந்து இவ்விறகினைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதே. உண்மையில் இவற்றை இம் மாவட்டத்தின் பற்றைக் காடுகள், புதர்க்காட்டு மரங்கள் மற்றும் வளவுகளில் உள்ள பயன்தரு மரங்களும் சேர்ந்தே பூர்த்தி செய்கின்றன.

ஆதாரம்



மக்கள் தற்போது பாவிக்கும் ஒரே யொரு எரிபொருளான இவ்விறகை மரத்தி லிருந்தும், மரக்கழிவுகள், விவசாய மிச்சங் கள், பனை, தென்னந்தும்பு, மட்டை, வீட் டுத் தோட்டங்களிலிருந்து வெட்டி வீழ்த்தப் படும் மரங்களிலிருந்தும் பெறுகின்றனர். தற் போது விறகிற்கான முழு நிரம்பலும் இருக் கின்ற சிறு காட்டு மரங்களிலேயே தங்கியுள் ளது. இதன் அடிப்படையில் இவ்வியற்கை தாவரங்கள் தொடர்ந்தும் தீவிரமாக அழிக் கப்பட பின்வரும் காரணங்கள் துணை நிற்கின்றன. அவையாவன.

யாழ் மாவட்டத்திற்கும், ஏனைய மாவட்டங்களிற்குமான தரைவழிப் போக்கு வரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்ததனால் ஏனைய மாவட்டங்களிலிருந்து விறகிற்கான மரங்கள் கொண்டு வரப்படும் முயற்சி முற் றாக செயலிழந்துள்ளது.

மின்சாரமின்மை, கடல் கண்காணிப்பு வலய சட்டங்கள் கைத்தொழில்கள் இயங் காமை போன்ற காரணங்களால் தொழிலை இழந்த வருமான வகுப்பினரின் அன்றாட ஜீவனோபாயத்திற்கான முயற்சியில் விறகு வெட்டி உழைப்பதனைத் தொழிலாககொண் டுள்ளனர்.

மின்சாரமின்மை, மண்ணெய் போன்ற எரிபொருளின் தட்டுப்பாடு காரணமாக முற் றாக எரிபொருளாக விறகினை பயன்படுத்த வேண்டிய நிலை, என்பனவாகும். இம் மாவட்டத்தில் ஏறக்குறைய 1,20,000 மக் கள் அகதிகளாக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி ஏறக்குறைய 1,00,000 மக்கள் தமது வேலையை இழந்துள்ளனர். இந் நிலைமை களினால் பாதுகாப்பு காரணங்களிற்காக அதிகளவு மக்கள் நகரப்பகுதி முகாம்களில் தங்கி இருக்கின்றனர். வேலையின்மை தீவிர மடைந்த அதே நேரத்தில் விறகிற்கான கேள்வியும் முனைப்படைந்துள்ளது.

கட்டிட வேலைத்தொழிலாளிகள், தச்சு வேலை செய்பவர்கள், மீன் பிடித்தொழிலா ளர்கள் போன்ற தொழில்களை இழந்த மக் கள் விறகு வியாபாரத்தில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றில் 15% மானோர் 15 வயதுக்குட்பட்டவர்களாவும், 20% 20 வயதிற்கு மேற்பட்டோர்களாயும், காணப்படுகின்றனர். கிட்டத்தட்ட ஒருவர் சைக்கிளில் விறகினை சேகரிப்பதற்கு 15 மணித்தியாலம் செலவிடப்பட வேண்டியுள் ளது. மற்றும் கிராமப் புறப் பெண்கள் கூட தமது பிள்ளைகளுடன் அதிக தூரம் சென்று விறகினை சேகரிக்கிறார்கள். இந்நிலை பங் களாதேசம் போன்ற நாடுகளில் குடி நீரி னைப் பெறுவதற்கு பல மைல்கள் நடந்து ஒரு நாளினை செலவிடுவது போன்ற நிலையை ஒத்தது. உண்மையாக இப் பிர தேசங்களில் தற்போது நிலவும் வறுமையும், வேலையின்மை நிலையும் தான் இவ் வண் ணம் தமது நாளாந்த சீவானோபாய தொழி லுக்காக விறகு வெட்டுவதற்கு காடுகளிற்கு செல்கின்ற நிலை உருவாகியுள்ளது.

மேலும் ஒரு மனிதனின் சராசரி நாளாந்த விறகுப்பாவனை 0.7 கிலோ ஆகும். எனவே கிட்டத்தட்ட 200,000 குடும்பங்களைக் கொண்ட இம்மாவட்டத் திற்கான நாளாந்த விறகு நுகர்வுக்கு ஏறக் குறைய 1300 மெற்றிக் தொன் விறகு தேவை. இது ஒரு நாளைக்கு 26.7 ஹெக்டேயர் சம சக்தியுள்ள காட்டு மரங்களை வெட்டுவதற்கு சமமாகும். அண்மையில் எடுத்த ஆய்வு ஒன் றின் படி யாழ் நகரப்பகுதிக்குள்ளே நாளாந் தம் 80 மெற்றிக் தொன் விறகு சைக்கிள் மூலம், லொறி மூலம் கொண்டு வரப்படுகின் றது. இவற்றில் 95% மானவை வடமராட்சி கிழக்கில் நாகர்கோயில், குடத்தனை, மணற் காடு, சாவகச்சேரி பகுதிகளிலும், மாவட் டத்திற்கு வெளியே பச்சிலைப்பள்ளி பிரிவி லிருந்தும் கொண்டு வரப்படுகின்றது. இத் தொகை 1.7 ஹெக்டேயர் நிலப்ப குதிக் காடுகளை வெட்டுவதற்கு சமமாகும்.

இந்நிலையில் விறகுக்கான விலையும் அதாவது 100 கிலோ 400 ரூபாவாகவுள்ளது. சாதாரண குடும்பத்தின் நாளாந்த விறகுத் தேவை 4 கிலோவுக்கு 20/- வாக செலவிட வேண்டியுள்ளது. தமது வருமானத்தில் $\frac{1}{3}$ பங்கு

விறகுக்கு செலவழிக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனை விட கிராமப்புறங்களிலுள்ள மக்கள் தமது வீட்டுத் தோட்டங்களிலிருந்து பயன் குறைந்த மரங்களை வெட்டுவதன் மூலம் தமது விறகுத்தேவையை சமாளிக்கின்றனர்.

## சூழலியற் தாக்கங்கள்

தற்போதைய சூழ் நிலையால் மாவட்டத்திற்கான விறகுத் தேவைக்கு இருக்கின்ற காட்டு வளங்களையே தம்பியிருக்கின்றோம். இவற்றின் உபயோகத்தோடு துஷ்பிரயோகமும் ஏற்படுவது தவிர்க்க முடியாதுள்ளது. இவை எமக்கு நிகழ்காலப் பாதிப்புகளை விட நீண்டகால விளைவுகளை ஏற்படுத்த வல்லன.

காடுகளை பாதுகாப்பதனால் ஏற்படுகின்ற பொருளாதார நலன்களை மதிப்பிடுவது இலகுவாக இருந்தாலும் பல்வேறு வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் காடுகள் வகிக்கும் பங்கினை இலகுவில் கணிப்புச் செய்ய முடியாதுள்ளது.

இப் பற்றைகள் தற்போதைய எரிபொருள் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அழிக்கப்படுகின்றன. இவ்வறள் வளரிகள் இந்நிலையில் அழிக்கப்படுமானால் ஓரிரு வருடங்களில் இப்பிரதேசத்திலுள்ள வறள் வளரிகள் அழிந்து பாழ் நிலமாக (*Barren Land*) மாறிவிடும். இதன் மூலம் நிலமேற்பரப்பில் இருந்து ஆவியாகும் அளவு அதிகரிக்கப் படுவதுடன் மிகக் கடுமையான அளவு உவரேற்றமும் ஏற்படும். உதாரணமாக ஏரிக்கரையோர நிலங்களில் கடுமையான உவரேற்றத்தை எதிர் பார்க்கலாம். சாவகச்சேரி பிரிவில் வரணி வடக்கில் தம்பான், கறுக்காய் பற்றைக் காட்டுப் பகுதியில் அண்மையில் எடுக்கப்பட்ட நிலப்பயன்பாட்டு மதிப்பீட்டின்படி ஏறத்தாழ 45% மான பற்றைகள் இதுவரை அழிக்கப்பட்டுள்ளது. இடைக்குறிச்சி எனும் பிரிவில் கொடிக்காடு எனும் இடத்திலுள்ள பற்றைக் காடுகளில் 75% மான பகுதி அழிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் நெருக்கடி தொடருமானால் இப்பகுதியில் காணப்படும் சிறு காடுகளும் விரைவில் அழிக்கப்படும். இதனால் உவர் ஏற்றம், பாழ்நிலம் உருவாதல் தவிர்க்க முடியாததாகி விடும்.

நிலவளம் மட்டும்இருந்தும் பயன்பட்டு விடாது. நிலவளத்திற்கு இணைந்த நீர் வளமும் சேரும் போதே பயன் ஏற்பட வழி உண்டாகின்றது. யாழ் குடா நாட்டில் காணப்படும் நீர்வளம் பெரும்பகுதி தரைக்கீழ் நீராகவே காணப்படுகின்றது. தாவர அடர்த்தி காணப்படுமிடத்து நிலக்கீழ் நீரை அதிகரிக்கச் செய்யலாம். தாவரங்கள் இவ்வாறு அழிக்கச் செய்யுமிடத்து தரைக்கீழ் நீர்மட்டம் குறையக் கூடும்.

மேலும் மணற் பிரதேசங்களில் இயற்கைச் சூழலின் சமனிலையைப் பாதுகாப்பதில் தாவரங்கள் முக்கியமானவை. மணற்குன்றுகள் காற்றினால் எடுத்துச் செல்லப்படாமல் நிலைப்படுத்தி வைப்பதில் தாவரங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றது. உதாரணம் *Marram grass* போன்ற புல்வினங்கள் மணற் குன்றுகள் மேல் வளர்க்கப்பட்டு இவை பாதுகாக்கப்படுகின்றன. வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நீண்ட மணற்தொடர் இங்குள்ள வறள் வளரிகள், சிறுகாட்டு மரங்களால் அதாவது காற்றுத்தடை நிழல் வலயங்களாக காணப்படுகின்றன. காலகதியில் தாவரப் போர்வை அழிக்கப்படின் இம் மணல் மண் அதன் அயற் பிரதேசங்களில் படிய விடப்படும். இது தாவர வளர்ச்சிக்குரிய மண் ஈரப்பதன் குறைந்து ஆவியாக்கத்தை விரைவு படுத்துகின்றது. இத்தகைய பாதிப்புக்கள் நீண்ட காலத்தில் மழை வீழ்ச்சியிலும் குறைவினை உருவாக்கும்.

## தீர்வுகள்

வருமானம் குறைந்தவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது வேலையின்மையினை நீக்குவதாக அமையும்.

எரிபொருள் சிக்கனமுறை அடுப்புகள் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். உதாரணமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்திய இரட்டைச் சூட்டடுப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஓரளவு விற்குத் தேவையை அரைவாசியாகக் குறைக்க முடியும்.

அழிக்கப்படும் வறள் வளரிக்கு சமமான முறையிலும் எதிர்கால விறகுத் தேவையை கருத்திற் கொண்டும் தாவரங்களை ஏரிக் கரையோரங்களில் புதிய வறள் வளரிகளை உருவாக்குதல் அவசியம். இப்பகுதிகளை நேரில் அவதானித்து உரிய முறையில் வறள் வளரிகளை திட்டமிட்டு உருவாக்குதல் அவசியம்.

மாவட்டத்தில் ஒதுக்குக் காடுகள் உருவாக்கப்படல் அவசியம். இப்பிரதேசத்திற் காணப்படும் பரந்த தரவை குறிப்பாக தென்மராட்சி பிரிவுகளில் நிலம் போகும் நிலையில் நீண்ட காலத்தில் நிலமீட்சி செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதுடன் உவர் நிலங்களில் உவர் ஏற்றத்தினால் பாதிக்கப்படாமல் தடை செய்ய முடியும். தெரிந்தெடுக்கப்படும் பகுதிகளின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு உயர் அணைகள் கட்டப்பட வேண்டும். மழை காலங்களில் இவ் அரண்கள் நன்னீர், கடலில் சேர்வதைதடுப்பதுடன் வறள் சதுப்பு நில வளரிகள் வளர்வதற்கும் சிறு காடுகள் வளர்வதற்குமான சூழ்நிலை உருவாகும். இதன் மூலம் தாவர அடர்த்தியை அதிகரித்து பயன் பெற முடியும்.

உவர் தன்மையில் பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கு உகந்த புல்லினங்கள் அதாவது உவர்நீரைத் தாங்கி வரும் புல்லினங்களை அறிமுகப்படுத்தி இந்நிலங்களை பயனுள்ள தாவரப் போர்வையாக மாற்றலாம்.

தேவையற்றவிதத்தில் காடுகளை அழிப்பதை தடுப்பதற்கு கண்காணிப்புக்குழு அவசியமாகும்.

பிரதேச ரீதியான காடு வளர்த்தலை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் திட்டத்தை அமுலாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் சூழல் பாதுகாப்பு மரநடுகை சம்பந்தமான கருத்துக்கள், போட்டிகள் நடத்துவதன் மூலம் மக்கள் மயப்படுத்தலாம். இவ்வாறே சனசமூக நிலையங்கள். பொது ஸ்தாபனங்களிலும் காடு வளர்ப்புக் கலையை உணரச் செய்யலாம்.

## முடிவுரை

எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து நிலங்கள் பல பயன்களுக்கு உபயோகிக்கும் வகையில் ஓர் ஒன்றிணைக்கப்பட்ட அணுகுமுறையை காண்பதற்கு தேவை ஏற்பட்டுள்ளது. உயிரினங்கள் காணப்படும் வளிமண்டல பகுதியையும் அதன் சூழலையும் பாதுகாக்கும் தேவைகளையும் மட்டுமல்லாது இவ் இயற்கை தாவர மூலவளத்தை விவேகமாக அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கமாகும்.

சமீபத்திய அனுபவத்திலிருந்து காட்டு வளங்களைத் துரிதமாகவும், சுலபமாகவும் பயன்படுத்தலாம் என்பது தெளிவாகியுள்ளது. ஆனால் மீளவும் காடுகளை உண்டாக்கி வளர்ப்பதற்கு நெடுங்காலம் தேவையாகும் என்பதோடு இது எந்த விதத்திலும் இலகுவாக செய்யக் கூடிய காரியமும் அல்ல. ஆயினும் எங்களுடைய நில வளங்களையும், நீர் வளங்களையும் ஒழுங்குபடுத்தி வைப்பதில் காட்டு வளத்திற்கு அதி முக்கிய பயனுண்டு. இது நிலத்தை உபயோகிப்பதற்கு திட்டமிடுவதில் நிலப்பயன்பாட்டில் ஒரு போட்டி போடும் முறையென கருதாவிட்டாலும் எமது சுற்றுப்புறச்சூழல் (Sustainallo Development) நிலைத்து நிற்கச் செய்வதில் இயற்கைத் தாவரங்களின் பங்கு முக்கியமானது எனலாம். □□

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட

# எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்

நூல் மதிப்பீடு

□□ மா. சின்னத்தம்பி □□

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கைநூலான ''எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்'' என்பது தமிழீழப் பிரதேசங்களின் பொருளாதார வளங்கள் அதன் தேவைகள், அது எதிர் கொள்ளும் நெருக்கடிகள், அதற்கான தீர்வுக்குரிய தந்திரோபாயங்கள், அத்தந்திரோபாயத்தின் வழியமைக்க கூடிய நடவடிக்கைகள் என்பன பற்றி விபரிக்கின்றது.

இருபத்தைந்து பக்கங்களை மாத்திரம் கொண்ட சுதேசிய பொருளாதார விழிப்புணர்வு பற்றிய இச்சிறு நூலில் சமபக்கங்கள் போராட்டத்துடன் இணைந்த பொருண்மிய நிலைமைகள், அவற்றின் முதன்மை என்பவற்றை நிறுவனங்கள் தொடர்பாகவும், பொது மக்கள் தொடர்பாகவும் விளக்குகிறது. அரசியல் நிலைமைகள், அரசியல் இலக்குகள் என்பவற்றுடன் இணைந்த வகையில் இப்பிரதேசத்தின் புதிய பொருளாதார நெருக்கடிகளை மிக எளிய சொற்களில் சிறிய சிறிய வசனங்களில் சாதாரண பொது மகனுக்குரியதாக விளக்கப்படுகின்றன.

பொருளாதாரக் கோட்பாடுகளில் பரீட்சயமற்ற சாதாரண மக்கள் தாம் நிற்கும் தளத்தின் நிலமைகள், அரசியல் - சமூக - பொருளாதார தொடர்பு ஒழுங்கில் விளங்கிக் கொள்ள வேண்டும். அதற்கு உதவிபுரிய வேண்டும் என்ற இலக்குடன் இந்நூல் எழுதப்பட்டதெனக் கொண்டால் இந்நூல் முயற்சி முழுதாக வெற்றி பெற்றுள்ளது.



சாதாரண மக்களுக்கு பயவுணர்வை ஏற்படுத்தும் பண்பு அதிகம் சுமந்தனவாகவே பொருண்மிய நூல்கள் எழுதப்படுவதுண்டு. இதைப் புரிந்து கொண்டு அக்குறைபாட்டுக்கு உள்ளாகாத வகையில் நூலின் அளவு, அமைப்பு, அழகியல் அடுக்கமைவு, வசனமுறைமை, சொற்தெரிவு என்பன அமைந்து விட்டன. சிந்தனைக்களைப்பின்றி வாசிக்கக்கூடிய நூல் இது. அதே சமயம் பிரச்சனைகளின் யதார்த்த பூர்வமான முனைகளை முன்தள்ளி உணர்வு வழியாக அறிவார்ந்த செயற்பாடுகளுக்குள்

அனைவரையும் நுகர்வாளர் - முதலீட்டாளர் - நிபுணர்கள் போன்றோரை தள்ளிவிடும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

உலகரீதியிலான கடந்த கால போராட்டத்துடன் இணைந்த பொருளாதார அனுபவங்களைப் புள்ளிவிபரங்களுடனும் காலவரையறையுடனும் குறிப்பிடுகிறது. இந்த அனுபவங்களைச் சுட்டுவதன் மூலம் ஏனைய அபிவிருத்தித் தந்திரோபாயங்களை விட தற்சார்புப் பொருண்மிய உபாயம் எவ்வகையில் எமக்குப் பொருத்தப்பாடானதென இந்நூல் உசாவுகிறது.

தமிழீழப் பிரதேசத்தின் வளங்களின் பரம்பல், பொருண்மிய நிறுவனத்தின், நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான எத்தனங்கள் பற்றிய அறிமுகத்தை இந்நூல் சிறப்பாகவே தருகின்றது. நூலை வெளியிட்ட நிறுவனம் தனது பணிகள் பற்றியும் அவற்றின் இன்றியமையாமை பற்றியும் பகிரங்கமாகச் செய்யும் நெருக்கடிகாலப் பொருளாதாரப் பிரகடனமாகவும் இந்நூல் தோன்றுகின்றது. அப்படிப்பார்த்தால் நூலின் அளவையும் தாண்டி நூலின் நோக்கம் கனதியானதாக ஏற்றுக் கொள்ளத்தக்கது.

தமிழீழப் பிரதேசத்தின் பொருண்மிய மேம்பாடு என்பது ''நெருக்கடியிலிருந்து விடுபடல்'' என்பதோடு மாத்திரம் தொடர்புடையதல்ல, நீண்ட கால தேச நிர்மாணத்துடனும் தொடர்புடைய தென்ற தொலை நோக்குடைய பல பிரச்சனைகளை இந்நூல் முன்மொழிகிறது. இயற்கை வளம், மனிதவளம், இவற்றுடன் இணைந்த தொழில்நுட்ப வளர்ச்சி தொழில் நுட்பத்தின் பொருத்தப்பாடு என்பனபற்றியும் நிதானமாக ஆனால் மிகவும் சுருக்கமாக விபரிக்கிறது.


பொருளாதார நெருக்கடிகள் மக்களின் நுகர்வோடு நெருங்கிய தொடர்புடைய தென்பதை சுட்டிக்காட்டுவதோடு தீர்விலான அவர்களது பங்களிப்பு, அவற்றின் இன்றியமையாமை என்பன பற்றியும் இந்நூல் நிதானமான பார்வையுடன் விளக்கமளிக்கிறது. நுகர்வு என்பது தேசாபிமானம். சிக்கனம், மனவுறுதி என்பவற்றுடனும் இணைந்திருப்பதை அமெரிக்க, பிரித்தானிய, இந்திய அனுபவங்களுடாக விளக்குவதில் நூலாசிரியர் வெற்றி பெறுகிறார்.

இலங்கையின் கடந்த கால திட்டங்களின் உள்நோக்கங்களை உணர்வு பூர்வமாகச் சுட்டுவதன் மூலம் எதிர்கால பொருளாதார செயற்திட்டங்கள் தொடர்பான எச்சரிக்கை, கூர்மையான அவதானம், என்பவற்றை இந்நூல் வற்புறுத்துகின்றது. நிலத்தைப் பேணல் என்பது நிலத்தின் கீழ் உள்ள வளங்களையும், அந்நிலத்தில் வாழும் மக்களையும் அவர்தம் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு வாழ்வையும் பாதுகாப்பது என அர்த்தப் படுத்துவதாக நூலின் இறுதிப்பகுதி அமைகிறது.

''வளங்களின்றி வாழ்வேயில்லை'' என்ற அச்சுறுத்தும் தொனியுடன் நிறைவடையும் இந்நூல் எல்லா சாதாரண மக்களினாலும் வாசிக்கப்பட வேண்டியது - விளங்கிக் கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். அதுவே இந்நூலின் வெற்றியுமாகும். □□

ஆதாரம்





# வெற்றிலை

## எமது பண்பாட்டின் சின்னம்

□□ எஸ். வி. என் □□

தமிழீழத்தில் பரவலாக எல்லா இடமும் மிகச்சிறிய அளவில் வெற்றிலைச் செய்கை பண்ணப்பட்ட போதிலும், வடக்கே மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி ஆகிய இடங்களும் தெற்கே களுதாவளை, களுவாஞ்சிக்குடி, தேத்தாதீவு ஆகிய இடங்களும் இச்செய்கைக்கு சிறப்புப் பெயர் பெற்ற இடங்களாகும். இன்று வடக்கே பிரதான வெற்றிலைச் செய்கை பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டமையினால் இச் செய்கை மிகவும் குறைவாகவே உள்ளது. ஆயினும்

இன்று வலிகாமத்தின் மத்திய பிரதேசத்திலும், தென்மராட்சியிலும் இச்செய்கை சிறிய அளவில் (செய்கைபண்ண) தொடங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெற்றிலையின் உச்சவிலையும், வெளியே இருந்து வெற்றிலை வர வேண்டி உள்ளமையும், சேமிக்க முடியாத தன்மையும், வெற்றிலைச் செய்கையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

வெற்றிலை மருந்துக்கு குறைந்தளவும், பாக்கு சுண்ணாம்பு ஆகிய வற்றுடன் சப்புவதற்குப் பெருமளவிலும் பாவிக்கப்படுகின்றது. பொதுவாக வீடுகளில் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளிலும், இந்துசமய சடங்கு

வெற்றிலை
சிவப்பு இருவாட்டித் தரைகளிலும்
கபில இருவாட்டித்தரைகளிலும் இது செழித்து வளர்கின்றது
கடுமையான வெப்பம், காற்று
இவற்றினைத் தாங்கமாட்டாது
நீர் தேங்கும் தன்மையை சகிக்கமாட்டாது.

களிலும் வெற்றிலை முதலிடம் பெறுகின்றது.

(வெற்றிலையிலுள்ள ஐதரோக்குளோரிக் கமிலம், சமிபாட்டுத்தன்மையைக் காட்டுவதாக சொல்லப்படுகின்றது) தமிழிலும் வெற்றிலைக்கு ஒரு சிறப்பிடம் உண்டு அது காரணமாக ''வெற்றிலை நாட்டான்'' என்பது ஆகுபெயராக வருணிப்பதும் உண்டு.

## தாவர இயல்பு

கொடியாகப்படரும் தன்மையும், கணுக்களில் ஏறும் வேர்களை கொண்ட தன்மையும் இப்பயிரில் காணப்படுகின்றது. தண்டு மூலம் இனப்பெருக்கப்படுகின்றது.

## தேவையான மண்ணும் காலநிலையும்

சிவப்பு இருவாட்டித் தரைகளிலும், கபில இருவாட்டி தரைகளிலும் இது செழித்து வளருகின்றது. கடுமையான வெப்பம், காற்று இவற்றைத்தாங்கமாட்டாது. நீர் தேங்கும் தன்மையை சகிக்கமாட்டாது. நன்கு நீர்வடியக்கூடிய தன்மை அவசியமானது. சிறிதளவு உவர்த்தன்மை உள்ள நிலங்களில் இப்பயிர் செழித்து வளர்வது அவதானிக்கப்படுகின்றது. கூடுதலான மழை தேவை ஆயிலும், எமது பிரதேசத்தில் நீர்ப்பாசனத்துடன் சித்திகரமாக பயிரிடக் கூடியதாக உள்ளது,

இப்பயிர் நட ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே, தொட்டில், குடில் வைத்து மாடு கட்டுவார்கள், சாணகமும், சிறுநீரும் மண்ணுடன் சேரும், அதைத் தொடர்ந்து வைகாசி மாதத்தில் குரக்கன் பயிரிடப்படும். குரக்கன் பயிர் செய்வதனால் வெற்றிலைக்கு நோய்கள் வரமாட்டாது என நம்பும் வழக்கம் வெற்றிலைச் செய்கையாளரிடமுள்ளது. பொதுவாக இலைப்புள்ளி, தண்டு அழுகல் போன்றவை குரக்கன் நட்டால் வராமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

குரக்கன் அறுவடை முடிந்ததும் புரட்டாதி மாதத்தில் பெரும் பாத்திகள் கட்டி, நீர் இறைக்கப்படும். (10' x 3' அளவான அல்லது வசதிபோல பாத்திகள் அமைக்கப்படும்) தொடர்ந்து ஒன்றைவிட்டு ஒருநாள் நீர் இறைக்கப்படும்.

தொடர்ந்து நல்ல வெளிப்பான ஒரு நல்ல, நாளில் நிலத்தை உழுது, தூர்வையாக்கி மட்டமாக்கி, பாத்தி வாய்க்கால் என்பனவைஅடையாளம் செய்யப்படும். இது இரு முறையாகச் செய்யப்படுவதுண்டு. சில்லாலைமுறை, ஊர்முறை என இருவகையில் செய்யப்படலாம்.

அடையாளம் இடப்பட்டதும் உடனடியாக முள்முருங்கை நடப்படும். முள்முருக்கு கொடி படரஉதவும். 6'' சுற்று கொண்ட 6' - 8' உயரமான தடிகள் நடப்படும். அத்துடன் மூட்டுக்களில் சிறுகிழங்கு என்ற கிழங்கினம் நடப்படும். இது வெள்ளாட்டுக்கொம்பன், மயிரன் என்ற இரு இனங்கள் உண்டு சுற்றிவர வாழை நடப்படும். நடுவிலும் இன வாழைகள் நடப்படும். (ஆனைவாழை, மருத்துவை, பச்சை நாட்டான், மகேந்திரன், நேத்திரன், கப்பல், போன்ற இனங்கள்) இடையிடையிலும் சுற்றி வரவும் கத்தரி, மிளகாய், செடி அவரை ஆகியன நடப்படும் முழுத் தோட்டமும் சுற்றிவர பொறி வேலி அமைக்கப்படும். பக்கத்தில் அவரையின, பூசனி குடும்ப கொடி வகை நடப்பட்டு படர விடப்படும்.

இவையாவும் பெரும் பயன்தரும் ஆயினும் தொடக்க காலத்தில் இளம்பயிருக்கு நேரடியாக வெப்பம் காற்று தாக்காமல் பாதுகாக்கப் பயன்படுகின்றது.

## நடுகைப் பொருள்

வெற்றிலை பொதுவாக மூன்று இலைத் துண்டங்களாக எடுக்கப்படும். இத்துண்டம் எடுக்கும் விதம் பின்னால் விபரிக்கப்படும். இத்துண்டத்தில் கீழ் இலைக்கணுவின் கீழ்

$\frac{1}{4}$'' விட்டு சரிவாக வெட்டப்படும். கீழ் இலை $\frac{1}{4}$'' காம்பு விட்டுக் கிள்ளப்படும். இரண்டாவது இலையை நிமிர்த்தி மேல் இலையால் சுற்றி பனை ஓலைச்சார்வு ஆர்க்கையினால் லூசாகக் கட்டப்படும். இதைக் கொழுந்து எனவும், இதை நடுவதை கொழுந்து நடுதல் எனவும் சொல்லப்படும். (துண்டம் வெட்டிய அன்றே நடுகை செய்யப்படும்.)

## கொழுந்து நடுதல்

முன்பு தயாரிக்கப்பட்ட நிலத்தில் கார்த்திகை மாதத்தில் பாத்திகள் வாய்க்கால்கள் யாவும், புல்லுச்சத்தகத்தால் செருக்கிக் கட்டப்படும். இதன் பின்னர் பிடிப்பாரையினால் ஒரு முருக்கம் தடிக்கு இரு கொழுந்து வீதம் இருபக்கமும் 4'' அப்பால் பொழி அடிக்கப்படும். (பொழி அடித்தல் - துளை போடுதல்) இப்பொழிகளில் சிறுவர்களை கொண்டு ஒவ்வொரு கொழுந்து வைக்கப்படும். இதன் பின் அடிக்கணு மண்ணுள்ளும் நடுக்கணு நிலமட்டத்திலும் இருக்கக்கூடியதாக புழுதி மண்ணைத் தள்ளி உரம் கொடுக்கப்பட்டு உடனடியாக நீர்ப்பாசனம் செய்யப்படும்.

கொழுந்து நடப்பட்ட குழிகள், சரியாக மூடப்படாமலோ, அல்லது நீர் போய் குழியாகவோ இருப்பின் அவை அடைக்கப்படும். இதை பொய்குழி அடைத்தல் எனப்படும். குலைந்து இருந்தால் இலைகள் திரும்பவும் சுருட்டி சரி செய்யப்படும். மத்தியான நேரம் நீர்பாய்ச்சப்படும்.

## நீர்ப்பாசனமும் களைகளும்

தொடர்ந்து 12 நாட்கள் தினமும் நீர் பாய்ச்சப்படும், அதன் பின் ஒன்றைவிட்டு ஒருநாள் தொடர்ந்து நீர்பாய்ச்சப்படும்.

களைகள், சருகள் அடிக்கடி கவனித்து, கையால் பிடுங்கியும், சருகள் பொறுக்கியும் அகற்றப்படும்.

## தடி ஊன்றி கட்டுதல்

பயிர் முளைக்கத் தொடங்கியதும் தடி ஊன்றிக் கட்டப்படும். கடற்றொழிலாளர், வலை செய்வதற்காக சணலில் இருந்து நார் எடுத்த பின் தடியை வீசுவார்கள், இத்தடி அழுத்தமானதாகவும் முளைக்காததாகவும் இருப்பதனால் இதையே பாவிப்பர் தற்போது வசதிப்படும் பென்சில் மொத்தத்தடிகள் பாவிக்கப்படுகின்றது.

## கத்தரித்தலும் வடிவமைத்தலும்

இரண்டு மாத பருவத்தில் முதலாவது முறையாக கத்தரிக்கப்படும். முதலாவது கணுவிலிருந்து வரும் முனையில் இரண்டு கணு இலை விட்டு வெட்டப்படும். இது பூ அறிவு எனப்படும். பொதுவாக, கத்தரித்தல், நிலம் காய்ந்துள்ள போதும், வெயில் நேரத்திலும் செய்யப்படும். வெயில் நேரத்தில் வெட்டுவதனால் வெட்டிய இடத்தில் இருந்து சாறுகசிதல் குறைக்கப்படுகின்றது. சாறுபெருமளவில் கசியுமாயின் பயிர் வீரியம் குன்றிவிடும், பொதுவாக கத்தரித்தல் அமாவாசை நாளில் செய்யப்படும். கத்தரிக்கும் போது வேறுமுளைகள் இருக்குமாயின் அகற்றப்படும்.

இப்படியாகத் தொடர்ந்து 02 மாதங்களுக்கு ஒரு தடவை கத்தரிக்கப்படும். இக்காலத்தில் இப்பயிரை இளம் கொழுந்து எனச் சொல்லப்படும்.

இதேவேளை தொடர்ந்து பயிர் காற்றால் தாக்கப்படாமலும், சேதமடையாமலும், கவனமாக முள்முருக்கம் மரத்துடன் தொடர்ந்து கட்டப்படும்.
இப்படியாக வெட்டப்படும் போது கிடைக்கப்படும் குருத்துக்கள் சிறு வருமானத்தைத் தரும்.

பாத்திகள் சீர்செய்யப்பட்டதும் இக்காலங்களில் பெருமளவில் எரு இடப்படுவதில்லை.

ஆதாரம்



## ஆடி வெட்டு.

ஆடி மாதமளவில், குருத்துக்கள் 10-12 இலைவரை வளர்க்கப்படும். இடைமுளைகளும் வளரவிடப்படும். ஓரளவு வளர்ந்ததும் தலைப்புக்கிள்ளப்படும். 3ம் வாரத்தில் இலைகள் ஓரளவு பெரிதாகவந்ததும், மீண்டும் 2 இலை விட்டு வெட்டப்படும். வெட்டப்படும் பகுதிகளும் இடைமுளைகளிலும் வரும் இலைகள் விற்பனை செய்யப்படும் (இவ்விலை சாய்ப்பு எனப் பெயர் பெறும்.) இதன் பின் பாத்திகட்டி நன்கு உக்கிய தூளாக்கப்பட்ட எரு இட்டு நீர்ப்பாய்ச்சப்படும். மண்ணைக்கிளறி எருவை மண்ணுடன் சேர்ந்து விடப்படும்.

ஆடிவெட்டின் பின் நல்லவீரியமான முளைகள் வரும் இடைமுளை அகற்றி, பிரதானமுளை, முருக்கம் முள்ளால் தாக்கப்படாமல், முள்ளை அகற்றி முருக்கமரத்துடன் கட்டப்படும். அனேகமாக, இந்த முளையில், கக்கனிங்களில் புதிய அரும்புகள் உருவாகும். இக்காலத்தில் இப்பயிரை வெட்டுக்கட்டை எனச் சொல்வார்கள். முளைகள், கண்ணிகள் மிக அவதானமாக முருக்கமரத்துடன் இணைக்கப்படும். இதை பூட்டு பூட்டுதல் என்று சொல்லப்படும்.

முளை - 10 - 12 இலை வளர்ந்ததும் தலைப்புக்கிள்ளப்படும். மூன்றாம் வாரத்தில் மீண்டும் இரண்டு இலைவிட்டு அல்லது கண்ணி வந்த இடத்தைவிட்டு அதற்கு மேல் வெட்டப்படும். இப்படி வெட்டப்படும் துண்டுகளில் விதைக் கொழுந்து எடுக்கப்பட்டு. இவை புதிய நடுகைக்குப் பாவிக்கப்படும்.

இந்த வெட்டுடன் கண்ணிகள் மிக விரைவாக வளரும். 5 - 6 இலை வளர்ந்ததும் இரண்டு இலையையும் குருத்தையும் விட்டு மற்றவை கிள்ளி எடுக்கப்படும். இந்த இலை இளம்தாள்மாறு எனப்படும். மிகவும் கருமையான, பெரிய இலையாக இருக்கும் இந்தக் கட்டமே வருமானம் தரத்தொடங்கும் கட்டமாகும்.

தொடர்ந்து முளையும் கண்ணிக்கும் கட்டப்படும் 10 - 12 இலை வந்ததும் தலைப்பு கிள்ளி மீண்டும் முன்பு கூறியது போல வெட்டி பராமரிக்கப்படும்.

தை மாதத்தில் இரண்டாம் தடவையாக பாத்திகட்டி எருப் போடப்படும். தொடர்ந்தும் மேற்கூறிய ஒழுங்கில் பயிர் பராமரிக்கப்படும்.

## பதித்தல்.

ஆனி, ஆடி மாதத்தில் நன்றாக நிலம் காயவிடப்படும், வெறும் கொடியாக இருந்த 3-4 அடிப் பகுதி மண்ணுள் 9'' - 12'' ஆழத்தில் தாட்டு மிகுதி மட்டும் முருங்கை மரத்தில் கட்டப்படும். இது ஒரு வரிசையில் இருந்து மறுவரிசைக்கு பாத்தியூடாக தாட்டு எடுப்பதன் மூலம் செய்யப்படும். இதைப் பதித்தல் எனப்படும்.

இத்துடன் பாத்தி கட்டி எரு இட்டு நன்கு பராமரிக்கப்படும், இந்தக் காலத்தில் கண்ணிகளை தவிர மற்றைய முளைகள் (சாய்ப்பு) முற்றாக அகற்றப்படும். இதன் பின் கத்தரிக்கும் போது சாய்ப்பு அழித்து வெட்டப்படும். இந்தக் காலத்தில் தென்னம் பாளையை நீரில் ஊறவிட்டு அதனைத் தும்பாக கிழித்து, அதன் மூலமே கட்டப்படும் வரும் புதிய முளைகள் காற்றால் சேதமடையவிடாமல் முருக்கமரத்துடன் இணைக்கப்படும்.

கண்ணிகள் உருவானதிலிருந்து 3 கிழமைக்கு ஒரு தடவை இலைகள் பெறப்பட்ட போதும், பதித்த பின்னர் 2 மாதத்தின் பின் பெரும் விளைவு தரத் தொடங்கும்.

இக்காலத்தில் ஒவ்வொரு தடவையும் 25000க்கு மேல் முதலாம் தர இலைகள் 1000 கொழுந்திலிருந்து பெறலாம்.

## தொடர்பராமரிப்பு.

வருடம் இருமுறை கத்தரித்தலும், கட்டுதலும், வருடம் மூன்று முறை பாத்திகட்டி எரு இடுதலும், ஒன்றை விட்டு ஒரு நாள் நீர்ப்பாசனம் செய்தலும் தொடர்பராமரிப்பில் முக்கியமானவை.

## வெற்றியிலையின் வகைகளும் தரப்படுத்தலும்.

தொடக்கத்தில் வெட்டப்படும் துண்டங்களில் பெறப்படும் இலை சாய்ப்பு எனச் சொல்லப்படும். முதன்முதல் வரும் கண்ணிகளில் வரும் இலைகள் மாறு எனச் சொல்லப்படும். அதன் பின்னர் 4 - 5 தடவை பெறப்பட்ட பின்னர் கிடைக்கும் இலைகள், அடுவல் என்ற பெயர் பெறும்.

சாயப்பு பொதுவாக தென்மராட்சிப் பகுதி மக்களால் விரும்பப்படும் இலையாகும். இது நீளமான காம்புகளைக் கொண்டு கரும் பச்சை நிறமான இலைகளாகும்.
மாறு என்பது மிகப் பெரிய சாறு கூடிய தடிப்பான இலைகளாகும். இதுவே மருத்துவ தேவைக்கு கூடுதலாக பயன்படும்.

எல்லா வெற்றிலையும் பொதுவாக மூன்று தரமாக பிரிக்கப்படும். முதலாவது தரம் பெரிய வெற்றிலைகளைக் கொண்டதாகவும் இரண்டாவது தரம் சிறியிலைகளைக் கொண்டதாகவும் மூன்றாவது தரம் மூரி என்று பெயருடன் மிகச்சிறிய இலைகளையும் ஒழுங்கற்ற இலைகளையும் கொண்டதாக இருக்கும்.

## நோய்கள் பூச்சிகள்.

வெற்றிலை செய்கையில் நோய்ப்பூச்சி தாக்கங்கள் மிகக் குறைவு ஆயினும்.

01. இலைப்புள்ளி நோய்:- இலைகளில் மஞ்சள் நிறமாக தோன்றும் இலைப் புள்ளியானது, நடுப்பகுதி செங்கருமை நிறமடைந்து, இலைமுழுவதும் பரவும். இத்தாக்கம் ஏற்படும் இலைகள் பாவனைக்கு விரும்பப்படுவதில்லை. வழமையாக இலைகளைக் கண்டால் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

02. சதாப்பிடித்தல்:- அடித்தண்டுப்பகுதி பங்கஸ் தாக்கத்தால் பாதிக்கப்படும் போது கொடி நலிவுற்று விளைவு பாதிக்கப்படும். இலையும் அகற்றப்படுதல் வேண்டும்.

## பெரும் பாதிப்பு

வலிகாமம் வடக்குப்பகுதியில், வாடைக் காற்றுக் காலத்தில் மழை இல்லாபோது, சீமெந்துத் தொழிற்சாலை தூசி படிவதனால் வெற்றிலைசுள் பழுத்து விழுவதுண்டு இதை அவீர் எனச் சொல்வார்கள். இத்தாக்கம் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் பெரும் நட்டத்தைக் கொடுப்பதுண்டு.

## சில பயனுள்ள குறிப்புக்கள்

01. வெற்றிலைக் கொடிகளை கட்டப் பாவிக்கும் மரம் முள்முருக்கு ஆகும். இது கலியாண முருக்கு எனவும் பெயர் பெறும். (தாவரவியல் பெயர் எறித்திரைனா இன்டிக்கா என்பதாகும்) இதன் இலை கால்நடைகளுக்கு மிகச் சிறந்த உணவாகும். இந்த முள்முருங்கில் பல இனங்கள் (அழகுக்கு வளர்க்கப்படுபவை உட்பட) பல இனங்கள் இருந்த போதும், மிக கடும் முள்ளை உடையதும், கூடிய இலைகளை தருவதுமான ஒரு இனமே விரும்பப் படுகின்றது. இம்மரத்தை ஒரு வகைப் புழு, அடிப்பகுதியில் அரித்து சாற்றைக் குடித்து தாக்குவதினால் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

02. சிறு கிழங்கு என்பது இராசவள்ளிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கொடி

யாகப் படரும் கிழங்கினமாகும். எல்லா இராசவள்ளி வகை கிழங்கினங் களும் சித்திரை வைகாசியில் நடப்பட்டு தை மாசியில் அறுவடைக்கு வரும். ஆனால் இது மட்டும் புரட்டாதியில் நடுகை செய்யப்பட்டு ஆடியில் அறு வடை செய்யப்படும். முள் உள்ள வெண்மையான இலைகளைக்கொண்ட ஒரு கொடியியாகும். மற்றைய இராச வள்ளி கொடிவகைகள் மணிக் கூட்டுப் பக்கமாக மரத்தைச் சுற்றி வளர்வதை யும், இது மட்டும் எதிர் திசையாக மரத் தைச்சுற்றி வளர்வதையும் அவதானிக் கலாம்.

இதன் கிழங்குகள் அவித்துச் சாப்பிடு வதற்கு பாவிக்கப்படும்.

## 03, பாவிக்கப்படும் விசேட ஆயுதங்கள்

1. புல்லுச்சத்தகம் — பாத்தி கட்டப் பயன்படும்
2. பிடிப்பாரை — கிண்டுவதற்குப் பயன்படும்
3. வில்லுக்கத்தி — கத்தரிப்பதற்குப் பாவிக்கப்படும் சிறிய கத்தி
4. குல்லான் — நீர்ப்பாசனம் செய்யும் போது பாத்திக்கு மாத்தி கட்ட கிண்ட பாவிக்கப்படும் சிறிய ஆயுதம்

## 04. கட்டுவதற்குப் பாவிக்கப்படுவன.

தொடக்கத்தில் பன்னம் இழைகளும் பனை ஓலைச்சார்வுகளை நீரில் நனைத்து 5 செ. மீ அகலமான ஆர்க் கைகளாக கிழத்து அதனால் கட்டப் படும். பின்னர், தென்னம்பாளையில் மடல்போல உள்ளபாளையை வெட்டி, 5 - 6 தினங்களுக்கு நீரில் ஊறவிட்டு அதனால் கட்டுவார்கள். தொடர்ந்து செய்பவர்களுக்கு, விதைக் கொழுந்தும் முருக்கம் தடியும் முந்திய தோட் டத்தில் எடுக்கக் கூடியதாக இருப்பதனால் அதிக செலவு ஏற்படாது. தொடக்க காலத் தில், வருமானம் இல்லா விட்டாலும் கலப் பாக செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் ஓர ளவு வருமானத்தையும் ஊக்கத்தையும் தரும்.

## முடிவுரை

வெற்றிலைச் செய்கை வீட்டுத் தோட்ட மாக செய்வதற்கே மிகவும் உகந்தது. எமது பண்பாட்டின் சின்னமான வெற் றிலையை அழியாமல் பாதுகாப்போம். □□

---

### மாடு மேய்க்கும் திட்டம்

கால்நடைகளினால் ஏற்படும் பயிரழிவைத் தவிர்க்கும் நோக்குடன் மாடு மேய்க்கும் திட்ட மொன்றினை யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் நல்லூர் வட்டத்தில் அரியாலை மத்தி வடக்கு, அரியாலை மத்தி ஆகிய இரண்டு கிராமிய உற்பத்திக் குழுக்களும் இணைந்து இந்த திட்டத்தினை நடை முறைப்படுத்தி வருகின்றனர்.

இந்தத் திட்டத்திலே சுமார் 120 மாடுகள் தினமும் மேய்ச்சல் தரைக்கு கொண்டு செல்லப் பட்டு மேய்த்த பின்னர் மீளவும் மாட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு உரிமையாளர்களிடமும் இருந்து மாடு ஒன்றிற்கு 3.50 சதம் வீதம் அறவிடப் பட்டு வருகின்றது. இந்த திட்டத்தின் மூலம் 3 பேர் வேலை வாய்ப்பினை பெற்றுள்ள தோடு, சிறந்த முன்னேற்றகரமான திட்டமெனப்தும் குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்



# காலம்




☐ மிருசுவில் சுதா ☐

பளீர்... பளீர் என அறை விழும் சத்தமும் அந்த சத்தத்தினூடே அழுதழுது கதைக்கும் இளம் மனைவி லதாவின் சத்தமும் போட்டிக் போட்டு கொண்டு வந்து, ஒற்றுமைக்கு இலக்கணமாயும் அதே வேளை வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிப்பதுமான அந்த வீட்டை இரண்டுபடுத்தியது.

''நாசமாப் போன பொருளாதாரத்தடையால செய்யிற வேலையை செய்யாமல் நீங்கள் இருக்க நான் அயல்வீடுகளில கடன் வாங்கி நேரத்துக்கு நேரம் அவிச்சுப் போடுறன். நீங்க இப்ப என்னவெண்டால் என்னை அடிச்சு முறிக்கிறீங்கள்.''

''நீ...தா...ல வீணாய் வாய்காட்டாத''

என்று சொன்ன கணவன் சங்கர் கூறியது எதுவுமே அவள் காதில் விழவில்லை. வறுமையின் விரக்தி எல்லாம் வார்த்தையாக வெடித்தது.

''நான்.....நான் என்ன சொல்லிப்போட்டன் எண்டு இப்ப அடிக்கிறீங்கள். நான் மற்ற பொம்பிளையளைப் போல சீலை கேட்டனா? சட்டை கேட்டனா? விடிஞ்சா பொழுதுபோகும் வரைக்கும் பிள்ளையள் பசி பசி எண்டு கத்துதுகள் உலை வைக்க வழியில்லை நீங்கள் மேசன் வேலையை நம்பிக்கொண்டு வேற வேலைவெட்டி ஒண்டும் பாக்காம இருந்தா சீமெந்து வாற தெப்ப? நீங்க மேசன் வேலை பாக்கிறது எப்ப?'' என்று சொன்ன லதாவின் கதையைக் கேட்ட சங்கருக்கு, அவளுக்கு ஆறுதல் கூற வேண்டும் போல இருந்திருக்க வேண்டும்.

''சரி லதா நீ சொல்லிறது சரிதான்'' நான் இல்லையெண்டு சொல்லேல்ல, நீ விடிஞ்சவுடனே இது இல்ல, அது இல்ல, எண்டு பஞ்சம் கூறத் தொடங்கினா எனக்கு போற வேலை ஒண்டும் விடியாது. நானும் என்ன சும்மாவே இருக்கிறன் அங்க இஞ்ச எண்டு வேலைக்கு அலைஞ்சு தான் திரியிறன். அப்படி இருக்கைக்க நீ வந்ததும் வராததுமா புலம்பத் தொடங்கினா, நான் என்ன செய்யிறது? எனக்கு கோபம் வாறது கூட எண்டு உனக்குத் தெரியும் தானே லதா,''

லதா மேலும் விம்மி விம்மி அழுது கொண்டே ''உங்களை நம்பித்தானே நான் என்ர அம்மா அப்பாவை வெறுத்து வந்தனான். ஆனா நீங்க ... நீங்க'' என்று வார்த்தை வெளிவராது விம்மினான்.

''லதா! உன்னை நான் என்ர கண்போல பாப்பன் ஆனா நான் என்ன செய்ய சீமெந்தில்லாம ஆக்கிப் போட்டான்கள். இனி என்ன தொழிலையாவது செய்து குடும்பத்தைப் பாப்பன்''

''இங்கயப்பா எங்களிண்ட சேவையர் அண்ணை தோட்ட வேலைக்கு ஒரு ஆள் தேவையெண்டு சொன்னவராம் அதையொருக்கா நீங்க போய் விசாரிச்சுப் பாருங்கோவன்'' என்று அன்பாகச் சொன்னாள்.

''ஓம் லதா, தோட்ட வேலை நல்லதுதானே நாங்க என்ன கனடா போனவங்கள் போல பகட்டு வாழ்க்கை வாழப் போறமே? இல்லையே நாங்கள் அவனை இவனை நம்பாமல் சுயமா வாழப்போறம்,

நாங்கள் கஷ்ரப்பட்டாத்தான் எங்கட சிறிசுகளை நல்லபடியா வளக்கலாம். சரி பின்ன நான் வாறன் சேவையர் அண்ணையிட்ட போட்டு''

என்று சொல்லிக் கொண்டு வெளியே வந்த சங்கரைத் தடுத்து நிறுத்தி ''இஞ்சாருங்கோ தேத்தண்ணியைக்குடிச்சிட்டு போங்கோ என்று சொல்லிக் கொண்டு லதா தேத்தண்ணியைக் கொடுத்தாள்.

தேத்தண்ணியைக் குடித்துக் கொண்டே மனைவியைப் பார்த்த சங்கர் அவளது கன்னம் சிவந்து கண்டியிருப்பதைக் கண்டு கவலைப்பட்டான். தேத்தண்ணியைக்குடித்து முடித்து. கப்பைக் கீழே வைத்தவன்.

''லதாம்மா என்னை மன்னித்துக்கொள்'' என்று சொல்லிக்கொண்டே படலையைத் திறந்து வெளியே வந்தான்.

சேவையர் அண்ணை வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே அவரை வழியில் கண்டான்.

''அண்ணை ... எங்க துலைக்கே போறியள். உங்களிட்ட ஒரு விசயம் கதைக்க வேணும்'' என்று இழுத்தான்.

''என்ன .... டாப்பா சொல்லு சொல்லு'' என்று சொன்ன சேவையர் அவன் பதிலுக்காக காத்திருந்தார்.

''அண்ணை நீங்க தோட்ட வேலைக்கு ஆள் தேவையென்டு சொன்னீங்களாம்.''

''ஓம் ஓம் உனக்கேன டாப்பா அது'' என்ற சேவையரை

''வீட்ட பெரிய கஷ்டமா இருக்கு'' என்ற சங்கரின் பதில் ஆச்சரியத்துக்குள்ளாக்க ''ஏன் சங்கர் உன்ர மேசன் தொழில் உனக்கு இருக்கைக்க ஏன் நீ கவலைப்படுகிறாய்'' என்றார். ''அது அந்தக் காலம்'' என்ற சங்கரை சேவையரின் கதை இடைமறித்தது.

''என்னடாப்பா நீ ஊரில நாலு சனங்களோட கதைக்கிறேல்லையே. ஒரு விசயமும் அறியாம கதைக்கிறாய். இப்ப சீமெந்துக்கு மாற்றுவழி இருக்குது இப்ப சீமெந்துக்கு பதிலாக சுண்ணாம்பால கட்டிடங்கள் கட்டலாம் இப்ப எல்லா மேசன்மாரும் கொன்றாக் எடுத்து வேலை செய்யத் தொடங்கிற்றினம் உனக்குத் தெரியாதே'' என்று பொழிந்து தள்ளினார் சேவையர்.

''அண்ணை என்ன சொல்லுறியள் சுண்ணாம்பால கட்டி கடைசியில கட்டிடங்கள் கரைஞ்சு போயிடும் எல்லே நீங்க சொல்லுகிற கதையைக் கேக்க எனக்கு சிரிக்கிறதா அழுகிறதா எண்டு தெரியாம இருக்கு'' என்று சொல்லிக் கொண்டே சிரித்தான் சங்கர்.

''தம்பி நீ நல்லாச்சிரி உன்னைப் பார்த்து எங்கட மக்கள் சிரிக்கப் போயினம். தமிழீழத்தில பள்ளிக்கூடங்கள் கிணறுகள் மலசல கூடங்கள், வேற நிர்மாண வேலைகளையெல்லாம் சுண்ணாம்பால தான் செய்யினம். நீ ஏதோ புதுக்கதை கேட்ட மாதிரி சிரிக்கிறாய்'' என்று சேவையர் சொன்ன போது சங்கருக்குத்தான் தமிழீழத்தில் இருந்தும்கூட இது தெரியாமல் இருந்திருக்கிறேனே என்று வெட்கம் தலை தூக்க தலை குனிந்தான். □□

### வரகுப் பாண் உற்பத்தி அறிமுகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடல் பகுதியினரின் முயற்சியினால் வரகுப் பாண் உற்பத்தி தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் உற்பத்தி உரும்பிராய் மதுரம் பேக்கரியினால் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இப் பாண் உற்பத்தி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
[illegible]

# ஆதாரம்

பங்குனி - சித்திரை 1994
இதழ் - 12

''ஆயுதம் செய்வோம்
நல்லகாகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்
கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்
தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்
பலவண்மைகள் செய்வோம்''

—பாரதியார்

அறிவியற் தொழில்நுட்பம் இன்று மேற்குலகங்களின் தனித்த சொத்தாகி விட்டது. சுளேரிமான ஆராய்ச்சி அபிவிருத்திகள் அந்தத் தேசங்களில் தான் இடம் பெறுகின்றன. தேவையற்றதை, வழக்கொழித்ததை வறிய நாடுகளுக்குத் தானமாக வழங்குவதும் அவர்கள் செயற்பாடாகி விட்டது. அத்துடன் வறிய வளர்முக நாடுகளில் உருவாகும் மூளைசாலிகளையும் வழித்தெடுத்து தமது சொத்தாக்கி விடுகிறார்கள்.

கைத் தொழிற் புரட்சிக்கு அடுத்த புதிய அறிவியற் தொழில்நுட்பப் புரட்சியின் தோற்ற காலத்தில் (1955 - 65ம் ஆண்டுகளில்) 53,000 விஞ்ஞானிகள் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து மட்டுமல்ல, வறிய வளர்முக நாடுகளிலிருந்தும், பெரும்பாலும் இளைய தலை முறையினர் அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். மூளைசாலிகள் வெளியேற்றம் இத்துடன் நின்று விடவில்லை. இன்னமும் வறிய வளர்முக நாடுகளிலிருந்து, அதுவும் ஆக்க அறிவிற் சிறந்தோர்கள், மேற்குலகங்களால் கவரப்படுகிறார்கள்.

இவர்களது கல்விக்காக ஏராளமான பணத்தை இந்த வறிய வளர்முக நாடுகள் செலவிடுகின்றன. தேசிய நலனுக்கான உழைப்பு ஒன்றையே, சொந்தத் தேசங்கள், இந்த இளைய தலை முறையினரிடம் எதிர்பார்க்கின்றன. ஆனால் இவர்கள் உழைப்பதோ தாய் நாட்டுக்காக அல்ல. அந்நிய நாட்டுக்காக தமது சுய நலனுக்காக.

மேற்குலகில் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றி வளர்ச்சி கண்ட கைத்தொழிற் புரட்சியை புதிய அறிவியற் தொழில் நுட்பப் புரட்சி பின் தள்ளி விட்டது. கருவிகளின் காலம், இயந்திரங்களின் காலம், இன்றைய தன்னியக்க கணனிமயம் என வரலாறுகளைப் பின் தள்ளி முன்னேறுகிறது. பிரம்மாண்டமானதும், அசாதாரணமானதுமான ஒன்று ஒவ்வொரு யுகத்திலும் பிறக்கின்றது. நேற்று இருந்திராத ஒன்று இன்றும், இன்று இல்லாத ஒன்று நாளையும் இருக்கும். முடிவற்ற வியப்பு மிக்க நிலையான இயக்கம் அந்த தேசங்களில் நிலவுகின்றது.

அந்தத் தேசத்துக் களஞ்சியங்களில் உற்பத்திகள் நிரம்பி வழிகின்றன. அவை மூன்றாம் உலக சந்தைகளில் வந்து குவிந்து கிடக்கின்றன. அழுத்தங்களில், முதுகை முறிக்கும் சுமைகளில், தலை நிமிர்த்தவோ, தலையெடுக்கவோ முடியாமல் மூன்றாம் உலகின் தேசியத் தொழிற்துறைகளில் பல முடங்கி விட்டன.

தேசிய தொழிற்துறைகளெல்லாம் சிதைக்கப்பட்டு, பொருண்மிய பொருளாதார ரீதியில் வளர்முக நாடுகள் எவ்வளவுதூரம் ஒடுக்கப் படுகின்றன என்பதை நாம்சரி

யாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பேராபத்துக்களெல்லாம், பொருண்மிய விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுக்கும், எமது தமிழீழத்தையும் சங்கிலித் தொடராகப் பிணைத்துத் தான் நிற்கின்றது.

எமது தேசத்தைப் பொறுத்த மட்டில் இன்றைய கெடுபிடி யுத்தத்திற் கெதிரான இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகள் முதன்மை பெறுவது தவிர்க்க முடியாத ஒன்று

மேற் குலகின் நவீன பயங்கர ஆயுதங்களெல்லாம் எமக்கெதிராகப் பிரயோகிக்கப் படுகின்றன. எமது வைராக்கியம், சுய நம்பிக்கை, பயங்கர சூழல்களையெல்லாம் மன வலிமையுடன் எதிர் கொள்ளல், இவை தான் இந்தப் பேராபத்துக்களிலிருந்து, எம்மைத் தடுத்து நிறுத்தும் ஆயுதங்கள். எங்களது மனோ பலங்கள், எங்களுக்கான யுத்த தொழில் நுட்பங்களையும் தேடித் தந்து தானுள்ளது. எங்களுக்குள்ள சுய நம்பிக்கைகள், சுய சிந்தனைகள் இன்னும் அனேக புதிய கண்டு பிடிப்புகளுக்கும் கட்டாயம் வழி வகுக்கும். எமது பொருண்மியத்திலும், எமது சமூக பண்பாட்டு வாழ்விலும் மேம்பாடுகளை நாம் விரைவிலே காண வேண்டும். அதற்கான முயற்சிகள் அனைத்தையுமே வெகு தீவிரமாக்க வேண்டும். நன்கு திட்டமிட்ட சமூக செயற்பாடு ஒழுங்கமைப்புக்கள், நவீன அறிவியற் தொழில்நுட்பங்கள் இவை இரண்டுமே அனைத்தையும் தீவிரப்படுத்துவதற்குரிய சரி யான கருவிகளாகும்.

எங்களுடைய சமுதாயம் உயர்ந்த நாகரீகங்களுடன் வாழ்ந்த வரலாறுகளைக் கொண் டிருக்கின்றது. அறிவியற் சிந்தனைகளில் மேம்பட்டிருந்தமைக்கான சுவடுகள் இன்னமும் அழிந்து விடவில்லை. அறிவியற் சிந்ததனைகளை பிரயோகிக்கும் வாய்ப்புக்கள், தேசிய மேம்பாட்டுக்கான வழிகள் அத்தனையும் மிக நீண்ட காலமாக அடைபட்டுக் கிடந்தது. அறிவியற் சிந்தனைகள் மேலும் மேம்படுவதற்கு சிறந்த தொழிற்துறை அடித்தளம் மிக அவசியம். சிறந்த தொழிற்துறை சூழலிலே தான் அறிவியல் மேலும் மேம்பாடடை யும்.

முன்னைய பிரித்தானிய ஆட்சியாளர்கள் தங்களது விருப்பங்களுக்கேற்பவே முற் றிலும் வெளி நோக்கங்களைக் கொண்ட கல்வி அமைப்புக்களையே இங்கே தோற்று வித்துள்ளார்கள். தேசிய தொழிற்துறை மேம்பாடு பற்றிய சிந்தனைகள் அவர்களுக்கு இருக்கவில்லை. தமது தேசங்களின் தொழிற்துறை மேம்பாட்டிற்கான வர்த்தக விவ சாயப் பொருட்களை இந்த மண்ணில் உருவாக்குவதிலும் எமது தேசிய வளங்களை அள்ளிச் செல்வதிலும் மட்டுமே அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். அந்நிய தேசங் களின் உற்பத்திப் பொருட்கள் எமது சந்தைகளில் குவிக்கப்பட்டன. எமது மண்ணுக் குப் பொருத்தமான அறிவியல் ஆய்வுகளுக்கோ, பிரயோக தொழில் நுட்ப வளர்ச்சிக்கோ ஒத்திசைவான சூழ் நிலைகள் இந்தத் தேசத்தில் உருவாக்கப்படவில்லை.

19ம் நூற்றாண்டுகளிலிருந்து மேலைத் தேச அறிவியற் கல்வி வாய்ப்புக்களை பெற்ற எம்மவரில் பலர் அன்றிலிருந்து இன்று வரை தென்னிலங்கையிலும், அந்நிய தேசங்களிலும் அறிவியற் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டு தானி ருக்கிறார்கள். பலன் மிக்க ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்திக் கொண்டு தானிருக்கி றார்கள்.

எந்திரத்துறையில், மின்னியல் துறையில், குடிசார்துறையிலும் தலைசிறந்த பொறியியலாளர்கள் உருவாகியுள்ளார்கள். இன்னமும் உருவாகிக் கொண்டு தானிருக்கிறார்கள். இலங்கையின் பாரிய நீர் மின் விசைப் பொறியமைப்புக்களில், துரித பாரிய மகாவலி நீர்ப்பாசனத் திட்டங்களில் தங்களது பெயர்களைப் பொறித்துத் தானிருக்கிறார்கள். இனவாதம் உச்ச மடைவதற்கு முன்னர், இவர்கள் தான் இலங்கையை நிருமாணித்தார்கள். மருத்துவத்துறையிலும் எம்மவர்கள் தான் முதன்மை பெற்றிருந்தார்கள். அரச, தனியார் தொழிற்துறைகளில், சேவைத் துறைகளில் எண்ணற்ற தொழில் நுட்பவியலாளர்கள் நிறைந்திருந்தனர் இன்று வளங்கொழிக்கும் அந்நிய நாடுகளை மேலும் வளப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எமது மண்ணிலே பிரயோகிக்கப்படா விட்டாலும், எமக்கென்றொரு விஞ்ஞானக் கல்விப் பாரம்பரியம் உண்டு. இவர்கள் தான் அதை உருவாக்கி வைத்தார்கள்.

இங்கே திறமைக்குப் பஞ்சமில்லை. இந்த மண்ணிலே திறமைகளைப் பிரயோகிக்க வேண்டும். இந்த மண்ணை வளப்படுத்த வேண்டும், என்கின்ற தேசிய சிந்தனைகள் தான் இன்னமும் மட்டுப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றது. தமிழினமாக, தமிழ்த் தேசமாக எங்களைத் தனிமைப்படுத்திப் பார்க்கும் பொழுது கால முன்னேற்றங்களில் நாங்கள் எங்கோ தொலைதூரம் பின் தள்ளப்பட்டு விட்டோம். ஆற்றல் மிக்க மனித வளத்திற்கு, பொருள் உற்பத்திக்கான மூலவளங்களிற்கு இங்கே குறைவில்லை. அளப்பரிய ஆற்றல்கள் கொண்ட இந்த மூலவளங்கள் பயனற்றுக் கிடக்கின்றன. நாங்கள் எங்கள் தேவைகளிற்காக இன்னமும் அந்நிய தேசங்களில் தங்கியிருக்கின்றோம். இந்த மூலவளங்களை எங்களது தேவைகளுக்குப் பயன் கொள்ளத்தக்கதாக்க, பொருள் உற்பத்திகளாக்க அடிப்படை ஆய்வுகள் விரைவு படுத்தப்பட வேண்டும். அறிவுக் கூர்மை கொண்டவர்களை இணைத்து ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ளத்தக்க ''ஆய்வு மையங்களை'' உருவாக்க வேண்டும். மேற்குலகின் நவீன அறிவியற் தொழில் நுட்பங்களைப் பெற்று எமக்கேமற்ற விதத்தில் பயன்படுத்தும் முயற்சிகள் விரைவு பெறவேண்டும். உற்பத்திப் பெருக்கத்திற்காக, சொந்த தேசத்தின் நன்மைக்காக அறிவியற் தொழில் நுட்பங்களை பிரயோகிக்கும் சிந்தனைகள் வலுப்பெற வேண்டும். இது தமிழீழத்தில் உள்ள ஒவ்வொருக்கும் உள்ள கடமையாகும். ☐☐

☐☐ தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ☐☐

---

## முல்லை மாவட்டத்தில் 50 ஆயிரம் மரங்கள் நடப்பட்டன

அழிந்து வரும் காட்டுவளத்தைப்பாதுகாக்கவும், சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் மரநடுகையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இவ்வகையில் முல்லை மாவட்டத்தில் 1993ம் ஆண்டில் 50 ஆயிரம் மரங்கள் நிறுவனத்தால் நடப்பட்டன. 32.000 ற்கு மேற்பட்ட பனை விதைகள் 9000 தேக்கம் கன்றுகள் 10000ற்கு மேற்பட்ட பயன் தரு மரங்கள் இவ்வீதம் நடப்பட்டன. இம்மரநடுகைச் செயற்பாடுகளில் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், மற்றும் நிறுவனங்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும். ☐☐

# குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 5 முடிவுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | 1 ச | ண | ல் | ■ | ■ | 4 பா |
| 2 உ | ழ | வு | ■ | ■ | ■ | 3 கா | ளை |
| ழ | ■ | க் | ■ | 9 த | ■ | ளா | ■ |
| ந் | ■ | 4 கு | ர | க் | க | ன் | ■ |
| து | ■ | ■ | ■ | கா | ■ | ■ | 10 து |
| ■ | 5 நா | 11 க | தா | ளி | ■ | 6 ரி | வ |
| 12 டு | ■ | கு | ■ | ■ | 13 ரி | ■ | ரை |
| 7 கூ | ட் | டு | ப் | ப | ச | ளை | ■ |

பரிசுக்குரியவர்கள்:-

1) சத்தியலிங்கம் சுமதி
''இராணி மகால்''
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

2) ச. சந்திரமோகன்
24, யூனியன் குளம்
கோணாவில்,
கிளிநொச்சி.

3) ம. மங்கையற்கரசி
செல்லப்பிள்ளையார்
கோவிலடி
சந்திரபுரம்
மட்டுவில்,
சாவகச்சேரி.

☐ பரிசு பெற்றவர்களுக்குரிய பரிசில்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

☐ முதலாவது குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து தமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களை குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளாக பின்வரும் நிறுவனங்கள் தொடர்ந்து வழங்கி வருகின்றன.

- **மில்க்வைற் தொழிலகம்**
  **யாழ்ப்பாணம்.**
- **அண்ணாதொழிலகம்**
  **இணுவில்**
- **ரேஸ்ட்லைன் இண்டஸ்றீஸ் (பி) லிமிட்**
  **யாழ்ப்பாணம்**

ஆதாரம்

# மக்கள் சேவையில் பூநகரி ப. நோ. கூ. சங்கம்

## நுகர்ச்சிச் சேவை.

1. புடவை வகைகள். பாடசாலை உபகரணங்கள்.
2. கிருமி நாசினி, களை கொல்லிகள்,
3. உரம், நீர் இறைக்கும் இயந்திரம், அல்கத்தீன் குழாய்கள்.
4. கட்டிடப் பொருட்கள். எரிபொருட்கள்.
5. தபால் தலை, 6. முத்திரைகள் விற்பனை.

## உற்பத்திச் சேவை.

1. அரிசி ஆலை, உற்பத்திப் பகுதி, பாவனையாளர் பகுதி.
2. உள்ளூர் அரிசி உற்பத்தியும், கொள்வனவும், சந்தைப்படுத்தலும்.
3. நெல், மிளகாய், உழுந்து, கௌபீ, கச்சான், பயறு போன்ற உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தலும், கொள்வனவும், சந்தைப்படுத்தலும்.
4. மாதிரிப் பண்ணையும், நாற்று விநியோகமும்.
5. உருளைக்கிழங்கு உற்பத்தித் திட்டமும், விதை கிழங்கு விநியோகமும்.
6. கூட்டுறவு மகளிர் சுய வேலை வாய்ப்புத் திட்டம்.

## கல்விச் சேவை.

1. தொண்டர் ஆசிரியர் சேவை.
2. பாலர் பாடசாலை.
3. பல்கலைக்கழக கல்வியில் விசேட துறையில் பயிலும் திறமையான மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் திட்டம்.
4. புதினப் பத்திரிகை விநியோகச் சேவை.
5. தொல்பொருள் மேலாய்வுகளுக்கு ஒத்துழைத்தல்.
6. கூட்டுறவுக் கல்வியும், பயிற்சி நெறி வழங்குதலும்.
7. உறுப்பினர்களுக்கான கல்வி சார் கருத்தரங்குகள்.
8. கலை நிகழ்வுகளை நடாத்துதல், கலாச்சார நிகழ்வுகளுக்கு உதவுதல்.

## கிராமிய வங்கிச் சேவை.

1. வாடிக்கையாளர், உறுப்பினர்களின் சேமிப்பினை மேம்படுத்தல்.
2. சிறு தொழில் முயற்சிகளுக்குக் கடன் வழங்குதல்.
3. முதலீட்டுச் சேமிப்பினை மேற்கொள்ளுதல்.
4. விவசாயக் கடன் வழங்குதல்.
5. ஓய்வூதியம் வழங்குதல்.

## நூலக சேவை.

1. உடனுதவும் பகுதி. இரவல் கொடுக்கும் பகுதி.
2. மாணவர் பகுதி.

## சமுதாய மேம்பாட்டுச் சேவை.

1. பனை விதை நடுகையும், பனந்தோப்புப் பராமரித்தலும்.

**பூநகரி ப. நோ. கூ. சங்கம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு.**

பி. வி. ஆர். ஜுவலறி

| நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம் | ஓடர் நகைகளை குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும் |
|---|---|

# பி. வி. ஆர். ஜுவலறி

(உரிமையாளர். கே. கிருஷ்ணசாமி)
பிரதான வீதி,
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.

☐ பலசரக்குச் சாமான்கள்
☐ நவீனரக புடவை வகைகள்
☐ சயிக்கிள் உதிரிப்பாகங்கள்
☐ எவர்சில்வர் பொருட்கள்

என்பனவற்றை
மொத்தமாக,
இல்லறையாகப்
பெற்றுக்கொள்ள
ஓரே வியாபார நிலையம்

பொது நூலகம் யாழ்ப்பாணம்
...க்குளி கிளை நூலகம்.

# தெய்வேந்திரம் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
புதுக்குடியிருப்பு.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
கிளை நூலகம்.



## பசுமைப் புரட்சி
## தமிழீழத்தின் எழுச்சி

எங்கள் தாயகத்தை பச்சை நிறமாக்கி - பட்டினியில் இருந்து பாதுகாக்கும் விவசாயிகளே! நாங்கள் போர்க் கோலம் பூண்டது போல் மக்கள் ஏர்க்கோலம் பூண்டாக வேண்டிய புதுப்பணி காத்துக் கிடக்கின்றது! உறுதியுடன் நின்று உற்பத்தியைப் பெருக்குவோம் இன்று.

உங்களுக்கான சகல விதைகளையும் ''பசுமை விவசாய சேவை'' நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

### அமைவிடங்கள்

01. கோப்பாய் — நீர்வேலிச்சந்தி, நீர்வேலி
02. சண்டிலிப்பாய் — கட்டுடைச்சந்தி சண்டிலிப்பாய்
03. உடுவில் — மானிப்பாய் வீதி, உடுவில்
04. நல்லூர் — முடமாவடி, நல்லூர்
05. கோண்டாவில் — இருபாலை வீதி, கோண்டாவில்
06. சங்கானை — பிரதானவீதி, சங்கானை
07. கரவெட்டி — பருத்தித்துறை வீதி, நெல்லியடி
08. பருத்தித்துறை — மந்திகைச் சந்தி
09. கைதடி — கண்டிவீதி, கைதடி
10. சாவகச்சேரி — கண்டிவீதி, சாவகச்சேரி
11. கொடிகாமம் — கச்சாய் வீதி, கொடிகாமம்
12. பளை — கண்டி வீதி, பளை

# பசுமை விவசாய சேவை

விவசாயத் தேவைக்குரிய உள்ளீடுகளான உரம் கிருமிநாசினி விவசாயஉபகரணங்கள் ஆகியவற்றையும் வழங்க 'பசுமை விவசாய சேவை' காத்திருக்கின்றது.